Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00


நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-1147)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 22 (23.07.2003) புதன்கிழமை இதழ்: 294



யாழ்.பல்கலையில் நடைபெறவிருந்த நிகழ்வில் கலந்து கொள்ளவந்த, அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனவை மாணவர்கள் வழிமறித்து ஆர்ப்பாட்டம் செய்து திருப்பியனுப்பிய காட்சிகள்.

### பாதுகாப்பு வலயத்தினுள் பாடசாலைகள் மூடிக்கிடக்க, புனரமைப்பு விழாவில் பங்கேற்பா?

# ஜெயலத்திற்கு மாணவர்கள் எதிர்ப்பு;

# விழாவிற்கு விடாது திருப்பியனுப்பினர்!

## வெஸ்பேர்க் – தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் சந்திப்பு

விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம், நேற்று காலை கிளிநொச்சிக்கு வந்த நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினார்.

இக்கலந்துரையாடலில், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், ஜோர்ஜ், தொல்காப்பியன் ஆகியோரும் நோர்வேத் தூதரகத் துணை அதிகாரியும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பு - இன்றைய நிலை பற்றிய பொதுவான கலந்துரையாடலாகவே இருந்தது என ஜோன் வெஸ்பேர்க் கூறினார். ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த தீர்வுத்திட்டம் பற்றிப் பேசினீர்களா என அவரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை வாயிலில் நேற்று பரபரப்புச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

**ஜி.ரி.இசந். நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளை அதிபர்களிடம் கையளிப்பதற்காக- யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவந்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கலாநிதி ஜெயலத் ஜயவர்த்தனவை மாணவர்கள் தடுத்து நிறுத்தி திருப்பியனுப்பினர்.**

நிகழ்வில் கலந்துகொள்ள வந்த அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனவை- யாழ்.பல்கலைக்கழக முன் வாயிலில் வைத்து, பல்கலைக்கழக மாணவர்கள் தடுத்து நிறுத்தினர். நூற்றுக்கணக்கிலான பல்கலைக் கழக மாணவர்கள், அமைச்சரைப் பல்கலைக்கழகத்தினுள் நுழைய விடாது தடுத்து நிறுத்தியதுடன், அவருக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர்.

யாழ்.மாவட்டத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசாலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை குண்டுவெடிப்பு; நான்கு படையினர் காயம்!

(யாழ்ப்பாணம்)

அரியாலை இராணுவமுகாமில் கைக்குண்டொன்று வெடித்ததில் ஐந்து படையினர் காயமடைந்தனர். நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமுற்ற படையினர் ஐவரும், பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இச்சம்பவம் குறித்து இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## பாடசாலைகள் மீள்புனரமைப்பில் அரசியல் இலாபம் தேட முயற்சி!

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

ஜி.ரி.இசந். நிறுவனத்தால் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளைக் கையளிப்பது தொடர்பாக, யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த நிகழ்வு இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் -

நேற்றுக்காலை 11 மணியவில், கைலாசபதி கலையரங்கில், பாடசாலைகளை மீள்கையளித்தல் தொடர்பான நிகழ்வொன்று ஜி.ரி.இசந் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேற்படி நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத் திட்டம்; நாடாளுமன்ற விவாதம் தேவை!

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான ஆலோசனைகளின் உள்ளடக்கம் பற்றி, நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படவேண்டும். இதற்காக - இருதினங்கள் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிற்கு அனுப்பி வைத்த கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்தில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, அரசாங்கம் முன்வைத்த விடயங்கள் குறித்தும், தற்போது விடுதலைப் புலிகளிடம் ஒப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் பற்றி ஆராய்வதற்கு பொ.ஐ.மு. விசேட குழு

வடக்கு - கிழக்குப் பகுதியில் அமைக்கப்படவிருக்கும் இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக ஆராய்வதற்காக, பொதுஜன ஐக்கிய முன்னணி, விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

நேற்று முன்தினம் - ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில், லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டது.

## பல்கலையில் நடந்த சம்பவம் இனவாதிகளுக்கு வாய்ப்பாகும்!

### செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜெயலத்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இராணுவம் வெளியேறாதது ஓர் முக்கிய பிரச்சினை. இதைப்பற்றி- பேச்சுவார்த்தை மேசையிலேயே பேசப்படவேண்டும். இவ்விடயத்தில், எனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினை நிறைவேற்ற மட்டுமே எனக்கு அதிகாரமுண்டு என புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமாலை 3 மணியளவில், 'றான்' அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Expo Aviation (Pvt) Ltd.
EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# அர்ப்பணிப்பும் விசுவாசமும் உள்ள மக்களிடமே தமிழீழத்தின் விடுதலை தங்கியிருக்கின்றது!

## யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி

(நெல்லியடி)

தமிழீழ விடுதலையென்பது அர்ப்பணிப்பும், விசுவாசமுமுள்ள மக்களின் கைகளிலேதான் தங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் - அந்த இலட்சியப் பாதையில் மாபெரும் சக்தியாக வளர்ந்து, மக்களுடன் மக்களாக இணைந்து செயற்பட்டு வருகிறார் கள் என, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் வடமராட்சிக் கோட்ட ஊரகக்கிளை அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வ.இராசையா தலைமையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும்போது,

மக்கள் சக்தியே மாபெரும் சக்தி, அந்த மாபெரும் சக்தி புலிகளின் சக்தி. மக்கள் அழிந்தால் புலிகள் அழிவர். புலிகள் அழிந்தால் மக்கள் அழிவர். இது மறுக்க முடியாத உண்மை.

தமிழர் தமது தேசியம், தாயகம், தன்னாட்சி என்ற நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க, ஊரகக் கிளை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் சமபங்குண்டு. இவர்களின் அர்ப்பணிப்பும், விசுவாசமுள்ள சேவையின் மூலமே நாம் அடையவிருக்கும் இலக்கிற்கு அத்திவாரமிடப்படுகிறது.

எனவே, இவர்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கைக்குரியவர்களாகச் செயற்படுவது அவசியம், என்றார்.

மேற்படி கலந்துரையாடலில்- 35 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் அமைக்கப்பட்ட ஊரகக்கிளை உறுப்பினர்கள் 300 பேருக்கு மேல் கலந்துகொண்டனர்.

இறுதியாக, ஊரகக்கிளை உறுப்பினர் மத்தியிலிருந்து 15 உறுப்பினர்கள் கரவெட்டிப் பிரதேசத்திற்கான தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (101)

# இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி செயலமர்வு!

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துள்ள இளைஞர், யுவதிகளுக்கான ஒரு நாள் செயலமர்வு - மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பயிற்சி மண்டபத்தில், எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனமும், ஜி.ரி.இசற் நிறுவனமும் இணைந்து இந்தச் செயலமர்வை நடத்துகின்றன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், சி.ஈ.எப்.ஈ, தொழில் அபிவிருத்திச் சபை, தொழிற் திணைக்களம ஆகியவற்றின் வள ஆளணியாளர்களுடன் இச்செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வில் - முயற்சியாண்மை, பொருத்தமான தொழிற் தெரிவு, திறன்விருத்தி, தற்போதைய யதார்த்தநிலை பற்றிய கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி செயலமர்வில் கலந்து கொள்ள விருப்பமும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகள் - தங்கள் வரவினை உறுதிப்படுத்துவதற்கு, நாளை மறுநாள் வெள்ளிக்கிழமைக்கு முன்னர், மூளாயிலுள்ள சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவன அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (118)

# மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பேஜ் நினைவு கலாசார மண்டபம்

மறைந்த பிரமுகர் பேஜ் ஞாபகார்த்தமாக - கலாசார மண்டபமொன்று, மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நிறுவப்படவுள்ளது.

இரண்டரை மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடம், ஏற்கனவே உபயோகிக்கமுடியாத நிலையிலுள்ள முன்னைய அலுவலகக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிதாக 4500 சதுர அடியில் அமைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

இக்கட்டடம் - கல்லூரியின் பழைய மாணவரும், தென்கிழக்காசியாவின் பிரபல தொழிலதிபருமான ஒருவரால் அன்பளிப்பாகக் கட்டிக்கொடுக்கப்படவுள்ளது. (101)

# பொருட்காட்சியில் இடம்பெற்ற சிறுவர்களின் ஆக்கங்கள்!

உள்ளூராட்சி வார நிகழ்ச்சிகளின் ஓரங்கமாக - முன்பள்ளி சிறுவர்களின் ஆக்கங்கள் அடங்கிய பொருட்காட்சி, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட, சுமார் நாற்பதுக்கும் அதிகமான முன்பள்ளிகள் பங்குபற்றிய இப்பொருட்காட்சியில் - தானியங்கள் மூலம் கோலம் போடுதல், பூக்கள் கொண்டு கோலம் போடுதல், மிருகங்களின் முகமூடிகள், அச்சுப்பதித்தல், சோடாப் போத்தல்களில் இருந்து வடிவமைக்கப்பட்ட உருவங்கள், பூச்செண்டுகள் உட்பட சிறுவர்களின் ஆக்கத்திறனைக் காட்டும் பல பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (101)

### வலிகாமம் கோட்ட எழுச்சிப்பேரவை சங்கமம்

வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை பேராளர்கள் சங்கமமும், கோட்ட மட்டத் தெரிவும் - இன்று மாலை மூன்று மணிக்கு, சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட- வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களின் பிரதேச எழுச்சிப்பேரவையினரை - இச்சங்கமத்தில் கலந்துகொள்ளுமாறு, வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### குமுதினிப் படகு கட்டணம் அதிகரிக்கும்

நெடுந்தீவுக்கும், குறிகாட்டுவானுக்கும் இடையிலான குமுதினி படகுச் சேவையின் ஒரு வழிப் பயணக்கட்டணம் - பிரயாணி ஒருவருக்கு, ரூபா 10 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது. இந்தக் கட்டண உயர்வு, அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனத் தெரியவருகிறது.

### 50 சி.சிக்கு குறைந்த சைக்கிள்களுக்கு பதிவு தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

பெடல் உள்ளதும் 50 சி.சி. வலுவிற்கு குறைந்த இயந்திரம் கொண்டதுமான மொபெட் சைக்கிள்களைப் பதிவுசெய்யத் தேவையில்லை என்று, யாழ்.மாவட்ட உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஏனைய சகல மோட்டார் வாகனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

### மானிப்பாய் இந்துவில் புனரமைப்புப் பணிகள்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின், கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன்- ஆசிரியர் தங்குமிடம், வாகீசர் மண்டபம் என்பன புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான முன்னேற்பாட்டு நிகழ்வாக, அண்மையில் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை உறுப்பினர்கள், பாடசாலைக்கு வருகைதந்து, மதிப்பீட்டு வேலைகளை மேற்கொண்டிருந்தனர். (101)

# வலுவிழந்தோர் வாழ்க்கையில் முன்னேற சமூகத்தில் உள்ளோர் உதவ வேண்டும்!

## "வாழ்வகம்" ஆண்டு விழாவில் கோகிலா மகேந்திரன் உரை

(உடுவில்)

வலுவிழந்தோர் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமேயானால் - சமூகத்தவராகிய நாம், அவர்களுக்குப் பல வழிகளிலும் உதவவேண்டும்.

அவர்களைக் குறைபாடுடையவர்கள் என ஒதுக்கி வைக்காது, அவர்களையும் மனிதர்களாக மதித்து, வாழ்வில் உயர்வுபெற உழைப்பதே மனித தர்மமாகும் என, உடுவிலிலுள்ள வாழ்வகத்தின் 15 ஆவது ஆண்டு விழாவில் பங்குபற்றி உரையாற்றிய, உதவிக் கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

ஆ.இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்- இவர்களையும் சக மாணவர்களுடன் சகஜமாகப் பழகிப் படிப்பதற்கு, அவர்களின் வயதிற்கேற்ற வகுப்பில் கல்விகற்பதற்கு இடமளிக்க வேண்டும். அளவுக்கதிகமான பாசத்தினால், அவர்களுக்கு எந்நேரமும் உதவி செய்ய முனைவதும், அவர்களைப் புண்படுத்தும் செயலாகவே அமையும். உதவி வேண்டுமெனக் கேட்கும்போது செய்தால், அவர்களுக்கு அது பயனுள்ளதாகவிருக்கும் எனத் தெரிவித்தார்.

வாழ்வகத் தலைவி அ.சின்னத்தம்பி உரையாற்றுகையில் - 1972 ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த கல்வித்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இந்த இல்லம் - 1988 இல், தெல்லிப்பளையில் முதன்முதலாக வாழ்வகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளால் - பல இடங்களிலும் இடம் மாறிமாறி இயங்கிய வாழ்வகம், இன்று பல உதவிக் கரங்களின் உள் அன்பினால், சொந்த இடத்தில் 32 மாணவர்களை வழிநடத்தக்கூடியதாக அமைந்துள்ளது, என்றார்.

பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளை, பெற்றோர் இங்கு அனுப்பிவைக்கும்படியும், அவர் கேட்டுக் கொண்டார்.

வலிகாமம் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் இங்கு உரையாற்றுகையில் - விழிப்புலன் இழந்தோருக்கு கல்வி கற்பிக்கும்போது, சாதாரண ஆசிரியர்களால் பல பிரச்சினைகளைக் கிரகிக்க முடியாதிருக்கக்கூடும். இவர்களுக்கு விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களே தேவை. இதற்கு, தான் ஆவன செய்வதாக தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி, மு.திருநாவுக்கரசு உரைநிகழ்த்தியபோது - இன்றைய காலத்தில் பலர் மனம்போன போக்கில், மற்றவருக்கு உதவாது வாழ்கிறார்கள். அநாவசியச் செலவுகளில் ஒரு பகுதியை, இப்படிப்பட்ட வலுவிழந்த நிலையங்களுக்கு அளிப்பதன மூலம, தர்மத்தின் பயனைப்பெறமுடியும், எனத் தெரிவித்தார்.

வாழ்வக மாணவன் யோ.சுதாகரன் பேசும்போது - நாம் இங்கு கல்வி பயில்வதன் மூலம், வீட்டில்கூட செய்யமுடியாத பல காரியங்களைச் செய்யமுடிகிறது. அத்துடன் - சுய தொழில் முயற்சிக்கான அறிவும் கிடைப்பதால், எமது வாழ்க்கை ஒரு சுமையல்ல, எனத் தெரிவித்தார்.

வாழ்வகம் 15 ஆவது நிறைவு விழா மலரை - கோகிலா மகேந்திரன் வெளியிட்டு வைக்க, பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு - பரிசுகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (101)

# உலக உணவுத்திட்ட உதவியின் கீழ் 19 திட்டங்களுக்கு முன்னுரிமை!

## கரவெட்டி கூட்டத்தில் முடிவு

உலக உணவுத் திட்டத்தின்கீழ்- பிரதேச ரீதியாக, சிரமதான அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைகளை இனங்காணும் பொருட்டு - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை சார்ந்த சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கூட்டம், பிரதேச செயலாளர் சி.பசுபதி தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், ஐம்பது வேலைத்திட்டங்கள் இனங்காணப்பட்டன. அதில் பத்தொன்பது வேலைத் திட்டங்கள், முன்னுரிமை அடிப்படையில் உடனடி வேலைத் திட்டங்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

அத்துடன் - உடனடி வேலைத் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைப் படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு, கரவெட்டி பிரதேச செயலரின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த அனுமதி கிடைத்ததும் - உலக உணவுத் திட்டத்தின் அங்கீகாரத்துடன் வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளைத் துரிதமாகத் தான் மேற்கொள்வதாக, பிரதேசசபைச் செயலாளர் சி.பசுபதி தெரிவித்தார்.

உடனடி வேலைத்திட்டங்களாகத் தெரிவு செய்யப்பட்டவை பின்வருமாறு:-

முதலைக்குழி கோவிற்குளம், வல்வெட்டி பொதுக்கிணறு, மாணிக்கவளைக் குளம், கிராய் மயானம், விண்ணன் வீதி, சாண்டாகுளம், கரம்பாவெளி மயானம், மண்டான் மயான வீதி, மண்டான் மாவலி சன சமூக நிலையவீதி, வேரொண்டை மயானம், வட்டுவத்தை விளையாட்டு மைதானம், மருதடிக் குளம், தளவில் குளம், ஆண்டியப்பா குளம், புனித அந்தோனியார் ஆலய சேமக்காலை, செல்வாபுரம் வாய்க்கால், குமிழடி வாய்க்கால், குளங்கரை வாய்க்கால், கிராய் வாய்க்கால் ஆகியவற்றுக்கான புனரமைப்புப் பணிகளே முதலில் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிரமதான அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கமைய, சிரமதானப் பணியினை மேற்கொள்ளும் ஒவ்வொரு மனித வலுவும் - நாளொன்றுக்கு நான்கு மணித்தியாலங்களைக் கொண்டிருக்கும் எனவும், இவர்களுக்காக உலக உணவுத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 150 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும் எனவும் - இதில் சாதாரண பொதுமக்கள், அரச ஊழியர் அனைவரும் பங்களிப்புச் செய்யலாம், என்றும் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்தார். (13)

### நாடகப் போட்டி

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்ட ரீதியிலான சிறுவர் நாடகக் கண்காட்சிப் போட்டி, அடுத்தமாதம் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வலயமட்ட நாடகக் கண்காட்சிகள், 20 ஆம் திகதி நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)


நிறைஞ்சனாஸ் சங்கானை

கரன், குஷ்பு நடித்த

ஸ்ரீ பண்ணாரி அம்மன்

(சி-1338)

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

பாடசாலை மாணவர்களும் பெரியவர்களும் பார்த்து மகிழக்கூடிய பக்திப் படம்

THE ART OF WAR

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



ப்ரியமான தோழி

10.30, 2.30, 6.30.9.30

ரீக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

(சி-1137)

இயக்கம்: விக்ரமன


# போதைப்பொருள் தவிர்ப்பு நாள் போட்டி வலிகாமம் வலய முடிவுகள் வெளியாகின

போதைப்பொருள் தவிர்ப்புப் பற்றி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளில் - வலிகாமம் வலய போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு,

**சிரேஷ்ட பிரிவு**

*சுவரொட்டி, சித்திரப்போட்டி*

முதலாமிடம் - அ.மனோகரன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), இரண்டாமிடம் - சுரேஷ்கண்ணா (இணுவில் மத்திய கல்லூரி), மூன்றாமிடம் - ஜெ.குயின்சிகா (உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்), ச.திலகப் பிரகாஷ் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

*சிறுகதைப்போட்டி*

முதலாமிடம் - ச.நிஷாந்தி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), இரண்டாமிடம் - வி.பிரியா (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி), மூன்றாமிடம் - த.தர்சிகா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி).

*பேச்சுப்போட்டி*

முதலாமிடம் - ஏ.கிறேசியன் (இளவாலை புனித ஹென்றியரசர்), இரண்டாமிடம் - இ.நசிதன் (அளவெட்டி அருணோதயா கல்லூரி), மூன்றாமிடம் - அ.அனுசியா (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி).

**கனிஷ்ட பிரிவு**

*கட்டுரைப் போட்டி*


முதலாமிடம் - ஜெ.கவிதரா (கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), இரண்டாமிடம் - அ.சாந்தினி (அளவெட்டி அருணோதயா கல்லூரி), மூன்றாமிடம் - அ.மோகினி (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி).

*பேச்சுப்போட்டி*


முதலாமிடம் - சு.லக்ஸ்ஸா (சுன்னாகம் இராமநாதன் கல்லூரி), இரண்டாமிடம் - மு.சிந்துஜா (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), மூன்றாமிடம் - ச.கீரன் (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி). (101)


# பல்கலைக்குள் அமைச்சர் ஜயலத் நுழைவு தடுக்கப்பட்டது...!

## - நேற்றுப் பதிவான கமெரா காட்சிகள்


வாயிலில் கறுப்புக்கொடி


தடுத்து நிற்கும் மாணவர்கள்


அமைச்சரின் வாகனம் முற்றுகைக்குள்


அறுக்கப்பட்ட அலங்கார மாலைகள்


அமைச்சரை இறங்கவிடாது தடுக்கும் மாணவர்கள்


திரும்பிச் செல்லுகிறார் அமைச்சர் ஜயலத் படங்கள்: ராஜ்குமார்

# படையினர் - புலிகள் சிக்கல் தவிர்க்க மேலும் கண்காணிப்பாளர்கள் தேவை!

### கண்காணிப்புக்குழு பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவிப்பு

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு - மேலும் ஆட்களைச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடல்வலயப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவதற்கு - உறுப்பினர்களுக்குப் பற்றாக்குறை நிலவிவருவதால், கண்காணிப்புக் குழு உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதன்மூலம் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே உருவாகும், சில தேவையற்ற சிக்கல்களை முன்கூட்டியே தடுத்து நிறுத்தமுடியும் எனவும், ஹொக்லண்ட் மேலும் தெரிவித்தார்.

எனினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் - இன்னும் எத்தனை பேர், எப்போது நியமிக்கப்படவுள்ளனர் ஆகிய தகவல்களை அவர் வெளியிடவில்லை. (01)

# போரில் பலியான இராணுவத்தினரின் மனைவியர் எதிர்நோக்கும் நெருக்கடி!

### மறுமணம் செய்யும் வரையுமே அரசு உதவுவதால் சிக்கல்

(கொழும்பு)

போரில் இறந்துபோகும் இராணுவச் சிப்பாய்களின் மனைவியர், மீண்டும் மணமுடிக்கும் வரையே அவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படுவதால், ஏராளமான விதவைகள - மறுமணம் செய்யமுடியாது துன்பப்படுவதாக, இவர்களுக்கான புனருத்தாரன அமைப்பு குரல் கொடுத்துள்ளது.

இராணுவச் சிப்பாய்கள் - 16 வயது முதல 20 வயதுக்குட்பட்ட இளம் பெண்களைத் திருமணம் செய்துவிட்டு, சில மாதங்களிலேயே போரில் இறந்துவிட்டதனால், ஏராளமான இளவயதுப் பெண்கள் - குழந்தைகளுமின்றி, கணவனையுமிழந்து, மறுமணம் செய்து கொள்ளமுடியாமல் வாழ்வதால், அவர்களது எதிர்காலம் சூனியமாகிறது என்று குறிப்பிடும் இந்த அமைப்பின் தலைவி திருமதி குணதிலக,

இத்திட்டத்தினால் ஆயிரக்கணக்கான இளம் விதவைகள் பாதிக்கப்படுவதுடன், தற்கொலை செய்யவும் வாய்ப்பாகிவிடுவதாகக் கூறியுள்ளார்.

### இடைக்கால நிர்வாகத்துக்கான திட்டவரைபு

# விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் சகல கட்சிகளுடனும் அரசாங்கம் பேசுமாம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத் திட்டவரைபின் பரிந்துரை தொடர்பாக, அனைத்து அரசியற்கட்சிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக - அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால், விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஆரம்பத் திட்டவரைபு குறித்து, விடுதலைப் புலிகளிடமிருந்து பதில் கிடைத்த பின்னரே - அரசியற்கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் எனவும், அவர் தெரிவித்தார்.

தற்போது - அரசாங்கத்தால், விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு - ஆரம்பக் கட்டமே எனவும், இதில் - சிலவேளைகளில் மாற்றங்கள் செய்யவேண்டிய தேவைகளும் ஏற்படும் எனவும் குறிப்பிட்ட அந்த அதிகாரி -

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள ஆரம்பக்கட்ட பரிந்துரைக்கான பதில் கிடைத்தவுடன், சகல அரசியற்கட்சிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்பே - இடைக்கால நிர்வாக இறுதித் திட்டவரைபு தயாரிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# நீர்வளத்தைப் பேணுவதற்கு தனியானதொரு அலுவலகம்

### யாழ்.நகரப் பகுதியில் அமைகிறது

யாழ்குடாநாட்டின் நீர்வளத்தினைப் பேணும் நோக்குடன் - புனர்வாழ்வு அமைச்சினால் முன்னெடுக்கவுள்ள 'நீர்வளத்தினைப் பேணுதல்' என்ற திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக, யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நோர்வே அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, மூன்று பொறியியலாளர்கள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இதன் திட்டப் பணிப்பாளராக சிறிஸ்கந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் - வழுக்கியாறு, அரியாலையிலுள்ள உப்பாறு மற்றும யாழ்.மாநகரசபைக்குட்பட்ட குளங்கள் அனைத்தும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மேற்படி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய அலுவலகம், யாழ். நகரத்திலுள்ள, மூன்றாம் குறுக்குத் தெருவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (லி)

# யசுசி அகாஷியின் விஜயம் இப்போதைக்கு இடம்பெறாது!



இந்த மாத இறுதியில் கொழும்பு வருவதாக இருந்த, ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி - தனது விஜயத்தைப் பிற்போட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

நோர்வே அனுசரணையாளர்கள் - விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது பற்றி முடிவுகாணும் பட்சத்திலேயே, அவருடைய விஜயம் இடம்பெறுமென, ஜப்பானியத் தூதரக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

ரோக்கியோ உதவிவழங்கும் மாநாடு நடந்து முடிந்த பின்னர் - யசுசி அகாஷி கொழும்பு வரவுள்ளதாக, பலதடவைகள் செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அறநெறிப் பரீட்சையில் சித்தியடைந்தால் பல்கலை அனுமதியில் பத்துப் புள்ளிகள்!

"அறநெறிப் பாடசாலைகளில் கல்விகற்று, க.பொ.த. உயர்தர வகுப்பு அறநெறிக் கல்விப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு, பல்கலைக்கழக அனுமதியின்போது - 10 புள்ளிகள் வழங்கப்படுவதுடன், வேலைவாய்ப்புக்களின் போது, இந்த 10 புள்ளிகளும் சேர்த்துக் கொள்ளப்படும். இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது."

- இவ்வாறு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.தெய்வேந்திரநாயகம் தெரிவித்தார்.

மேற்படி திணைக்களத்தால், ஏற்பாடு செய்யப்பட்ட - மட்டக்களப்பு மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கு - கடந்த ஞாயிற்றுக் கிழமை, நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய அவர் -

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளம், அவர்களுக்கான சீருடை, மாணவர்களுக்கான சீருடை, சத்துணவு மற்றும் பாடசாலைகளுக்கான தளபாடம் ஆகிய விடயங்கள் தொடர்பாக அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் கோரிக்கை சமர்ப்பித்துள்ளோம்.

அதற்குரிய அமைச்சரவையின் அனுமதி விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்களுக்கான சத்துணவும், ஆசிரியர்களுக்கான அடையாள அட்டையும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

நாட்டில், தற்போது 927 அறநெறிப் பாடசாலைகள் உள்ளன. இவற்றில், ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 367 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். 3365 ஆசிரியர்கள், தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். தற்போது இந்துகலாசார அமைச்சு தனியாக இயங்குவதால், எமது நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறுகின்றன எனத் தெரிவித்தார்.

# கைப்பைத் தொழிற்சாலையிலிருந்து திடீரென விலகிய தமிழ்ப் பெண்கள்!

## பொலிஸார் தரப்பில் சந்தேகம் எழுந்திருக்கிறதாம்

(கொழும்பு)

நிட்டம்புவவில் திகாரிய என்னு மிடத்திலுள்ள கைப்பை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த 26 தமிழ் யுவதிகள், கடந்த 13 ஆம் திகதியன்று ஒரேசமயத்தில் தொழிலில் இருந்து விலகிச்சென்றுள்ளனர்.

இவர்கள் - மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, திருக்கோயில், தம்பிலுவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் யுவதிகளெனத் தெரியவருகிறது.

இவர்கள் அனைவரும் ஒரே நாளில் வேலையிலிருந்து விலகிச் சென்றமை சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதால், பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை - இந்தக் கைப்பை தயாரிக்கும் தொழிற்சாலையில் இன்னும் 23 தமிழ் யுவதிகள் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் அமைகிறது குட்டி 'டிஸ்னி லான்ட்'!

(கொழும்பு)

உலகப் புகழ்பெற்ற 'டிஸ்னி லான்ட்' ஒன்றைச் சிறியளவில் கொழும்பில் அமைக்கும் திட்டமொன்று உருவாக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாநகரசபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்களில், இத்திட்டம் முதன்மை வகிப்பதாகவும், இலங்கைக்குவரும் உல்லாசப் பிரயாணிகளைக் கவர, இத்திட்டம் பெரிதும் உதவுமென்றும், கொழும்பு உதவி மேயர் அஸாத் ஸாலி கூறியுள்ளார்.

இதுவரை காலமும் பல உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்த விகாரமகாதேவி பூங்காவையே, ஒரு புதிய 'மினி டிஸ்னி லான்ட்' ஆக மாற்றும் திட்டத்தை உருவாக்கியுள்ளதாகவும், இத்திட்டத்தின் அடுத்தகட்டமாக - கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் பல வித கேளிக்கை, விநோத நிகழ்வுகளைக் கொண்ட பலவித திட்டங்களும் அமுல்செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிடாரி அம்பாள் வருடாந்த உற்சவம்

(ஆனைக்கோட்டை)

வண்ணை வடமேற்கு - ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம், இன்று காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

இங்கு தினமும் மாலை 6.30 மணிக்கு "மகாபாரதம்" என்னும் பொருளில், இரா.செல்வவடிவேல் சொற்பொழிவு வாற்றவுள்ளார். (46)

## இணுவிலில் இலவச கணினி வகுப்பு இன்று ஆரம்பம்

இணுவில் கிழக்கு இளைஞர் கழகத்தினர் நடாத்தும் - தமிழ்த் தகவல் ஒருங்கிணைப்பு இலவசக் கணினி வகுப்புகள், இன்று ஆரம்பமாகவுள்ளன. கணினிக் கற்கைநெறிகளைப் பயில விரும்பும் மாணவர்கள் இதில் கலந்துகொண்டு பயன் பெறலாம் என, இளைஞர் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

## செஞ்சிலுவைச் சங்க தொண்டராகச் சேர அழைப்பு

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்குப் பிரிவு, கோப்பாயில் தொண்டராகச்சேர விரும்புவோர் - தமது விண்ணப்பங்களைக் கோப்பாய் பிரிவுடன் தொடர்புகொண்டு சமர்ப்பிக்குமாறு, பிரிவின் செயலாளர் இ.மயில்வாகனம் கேட்டுள்ளார்.

இந்தத் தொண்டர் சேவையில் 17 வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இணைந்துகொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டர்களாகச் சேர்ந்தவர்களுக்கு முதலுதவி உட்பட, பல பயிற்சிகள் வழங்கப்படவிருக்கின்றன. விபரங்கள் தேவைப்படுவோர்- பிரிவு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## யாழ்.இந்துக் கல்லூரி

# பழைய மாணவர் பிரிட்டன் கிளை வன்னி மாணவர்களுக்கு உதவி!

(கிளிநொச்சி)

யாழ்.இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஒன்றியம், வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

இந்த உதவித் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக - கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் முந்நூறு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக - கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்துக்குத் தொலைக்காட்சிப் பெட்டி, மின்பிறப்பாக்கிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் உட்படக் கற்பித்தல் உபகரணங்கள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான உதவிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சமுர்த்தி அலுவலர்களுக்கான சமூக வலுவூட்டல் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்களுக்கும், வலய அலுவலக உதவியாளர்களுக்குமான சமூக வலுவூட்டல் தொடர்பான பயிற்சிப் பட்டறை - எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில், பலாங்கொடயிலுள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ்.மாவட்டத்திலுள்ள 8 பிரதேச செயலகங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி அலுவலர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி அலுவலர்களுக்கான பயிறசிப்பட்டறை, ஏற்கனவே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கைவிடப்பட்ட விமானதளத்தில் ஏவுகணைகள் கண்டெடுப்பு!

புத்தளம் பாலாவிப் பகுதியில் இரு ஏவுகணைகளைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கண்டுபிடித்துள்ளனர். சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் கொடுத்த தகவலையடுத்தே, இந்த ஏவுகணைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக, புத்தளம் பொலிஸ் நிலையத் தலைமையகப் பொறுப்பதிகாரி ஆர். எம்.கே.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது, பயன்படுத்தப்பட்டு, தற்போது கைவிடப்பட்ட நிலையிலுள்ள விமான ஓடுதளம் ஒன்றுக்கு அருகிலேயே இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விமானப்படையினருக்கு அறிவித்துள்ளதாகவும், அவர்களின் விசாரணையின் பின்னரே மேலதிக விபரங்கள் தெரியவரும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

# தலைக்கவசமில்லாது செல்வதே பல மரணங்களுக்கும் காரணம்!

## போக்குவரத்து பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வதி ஒழுங்கைச் சரியாகக் கடைப்பிடித்து, தமது பாதுகாப்பினைத் தாமே உறுதிப்படுத்துவதன்மூலமே மக்கள் - வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் எனச் சுன்னாகம் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி எம்.கே. எஸ்.புஷ்பகுமார தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், பொலிஸார் - மக்களுடைய பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார்கள்.

வீதிகளில் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல், தலைக்கவசம் அணியாது செல்லும் வாகனஓட்டிகளை மறித்துக் குற்றப்பணம் அறவிடுவது, நீதி மன்றில் ஆஜர்படுத்துவது என்பன தனிப்பட்ட பகையுடனோ, முரண்பாடுகளுடனோ செய்யப்படுவதில்லை.

வீதி விபத்துகள் அதிகரித்து வரும்வேளையில், வீதியால் செல்லும் வாகனங்கள் - வீதி ஒழுங்கையும், சட்டத்தையும் மதித்து நடக்க வேண்டும் என்பதற்காகவே, நீதிமன்றில் அபராதம் விதிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் செல்லும்போது, தலைக்கவசத்தை முன் கூடைக்குள்ளே வைத்துவிட்டுப் பிரயாணம் செய்யும் மக்கள், தங்களுக்குத் தாமே அபாயத்தைத் தேடிக் கொள்கின்றனர்.

அண்மையில் இணுவிலில் நடந்த விபத்தில் - மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த இ.கேசவன் என்பவர் தலைக்கவசம் அணியாது வந்தமையால்தான், தலைப்பகுதி பாதிக்கப்பட்டு மரணமடைய நேரிட்டது.

இதைவிட இந்த வாகனத்துடன் மோதிய எல்ப் வாகனச் சாரதி, அனுமதிப்பத்திரம் வைத்திருக்காமையால், எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான பல துயரச் சம்பவங்களுக்கு மக்களே காரணமாகின்றனர். இயன்றளவு வீதி ஒழுங்கைக் கடைப்பிடித்து, மக்கள் நடக்க வேண்டும்.

துவிச்சக்கர வண்டிகளில் பிரயாணம் செய்பவர்கள் சமாந்தரமாகச் செல்லக்கூடாது. குறிப்பாக - மாணவர்களைப் பலமுறை எச்சரித்தும், அறிவுரை கூறியும் - வீதி ஒழுங்கை அவர்கள் கடைப்பிடிக்காத பட்சத்தில் நீதிமன்றில் குற்றப்பணம் அறவிடப்பட்டபோதிலும், அவர்கள் அசமந்தப்போக்கையே கடைப்பிடிக்கின்றனர் என, அவர் மேலும் தெரிவித்தார். (78)

## ஆரம்ப விழா

இலங்கையின் முன்னணி நிறுவனமான - ஜோன் கீல்ஸ் இன்ஸ்ரிரியூட்டுடன் இணைந்து ஐ.ஐ.எஸ் நிறுவனம் - சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்கல்வியை, யாழ்ப்பாண மாணவர்களுக்கு மிகக்குறைந்த செலவில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் ஆரம்ப விழா இன்று மாலை 4 மணிக்கு ஐ.ஐ.எஸ்ஸின் தலைமை அலுவலகத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.



வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சே.கதிர்காமத்தம்பி அண்மையில் ஜேர்மனிக்குச் சென்றிருந்த சமயம், அவருக்கு 'கொமேஸ்பார்க் குறிஞ்சிக்குமரன்' முருகன் ஆலயப் பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். அங்கு நடைபெற்ற சமய அறிவுப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கதிர்காமத் தம்பி - சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற நவநீதராஜா டெல்சியாவுக்கு தங்கப் பதக்கத்தை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : சி.தக்ஷிகன்
முகவரி : அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

மூன்றாவது அகவையில்



பெயர் : உ.சிவரூபன்
முகவரி : 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------------------
முகவரி :---------------------------------
பிறந்த ஆண்டு:---------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------
பெற்றார் ஒப்பம்


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்




மாணவர் மலர்


(1) கீழே தரப்பட்டுள்ள ஆறு பசுக்களுள் ஒன்று மட்டும் மற்றைய பசுக்களின் படங்க ளிலிருந்து வேறுபடுகின்றது. அந்தப் பசுவைக் கண்டுபிடித்து, பசுவைச் சுற்றி வட்டமிடுக.





(2) கீழே தரப்பட்டுள்ள உருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?



(3) கீழே தரப்பட்டுள்ள 7 உருக்களுள், இரண்டு உருக்கள் மட்டும் ஒரேமாதிரியானவை. அந்த உருக்கள் இரண்டையும் கண்டுபிடித்து, அவற்றைச் சுற்றி வட்டமிடுக.





(4) கீழே தரப்பட்டுள்ள 5 பிராணிகளுள் ஒன்று மட்டும் மற்றையவற்றிலிருந்து வேறுபடுகின்றது. அதனைக் கண்டுபிடித்து வட்டமிடுக.



(5) கீழே தரப்பட்டுள்ள 13 முக்கோணிகளுள் இரண்டு மட்டுமே ஒரேமாதிரியானவை. அந்த இரண்டு முக்கோணிகளையும் கண்டுபிடித்து, அவற்றின் எண்களை எழுதுக.

(1) ...................... (2) ...........................





(6) தொப்பியை மனிதர்கள் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மூன்றினை எழுதுக.

1) ..........................

2) ..........................

3) ..........................



(7) பால் வியாபாரி ஒருவர் பால் வியாபாரம் செய்து வந்தார். அவரிடம் 5 லீற்றர் அளவுச்சாடி ஒன்றும், 3 லீற்றர் அளவுச்சாடி ஒன்றும் வைத்திருக்கின்றார். அவர் 4 லீற்றர் பாலைச் சரியாக அளந்து ஊற்றினார். எப்படி ஊற்றியிருப்பார் என விளக்குக.


..........................

..........................

..........................


..........................


..........................




8) A பக்கத்தில் தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, B பக்கத்தில் பூர்த்தி செய்யப்படாத சித்திரத்தைப் பூர்த்தி செய்க.

A B





(தொடரும்...)

### பெற்றோர்களின் கவனத்திற்கு...!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. (பாடத்திட்டத்திற்கு உட்பட்டு அமையும்) வினாக்கள் தயாரிக்கும் போது - மாணவர்களின் வயது, அறிவு, திறன், மனப்பாங்கு என்பன கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நிதானமாகச் சிந்தித்து, அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கமைய மாணவர்கள் செயற்படும்போது, இப்பரீட்சை கடினமானதாக அமையாது.

மாணவர்களை வற்புறுத்தி விருப்பின்றிக் கற்பிக்கின்றபோது - மாணவர்கள் மனநோயாளிகளாக மாறக்கூடிய அபாயமும் இருப்பதாகக் கல்வியாளர்கள் எச்சரிக்கின்றார்கள். பிள்ளைகளுக்கு வயதுக்கு மீறிய வினாக்கள் வழங்குவதையும், அவர்கள் மீது சுமக்க முடியாத கல்விச்சுமைகளை ஏற்றுவதையும் தவிர்க்கவும். இன்றேல்.....!

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A. (Cey), B.Ed (Hons), Dip. in Ed.

# G.C.E O/L - வரலாறும் சமூகக்கல்வியும்

## தேசப்படம் தொடர்பாக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், அதன் விளக்கங்களும்


(சமவுயரக்கோட்டுப் படத் தொடர்ச்சி...)

### மலையின் சாய்வு

தேசப்படத்தில் மலையினுடைய சாய்வு எத்திசையில் அமைந்துள்ளது என வினா கொடுக்கப்படுவது வழக்கம். மலையினுடைய சாய்வினை ஒரு ஆறு ஓடும் திசையினைக் கொண்டு அறிந்துகொள்வது மிகவும் சுலபமானதாகும். தென்திசையினை நோக்கி ஆறு ஓடுகின்றதெனில், அந்த மலை தென்திசையினை நோக்கிச் சாய்ந்துள்ளது எனலாம். கிழக்குத் திசை நோக்கி ஓடினால், கிழக்குத் திசையை நோக்கி மலை சரிந்துள்ளது என அறியலாம்.

ஒரு ஆறு எங்கு உற்பத்தியாகின்றது என யாவரும் அறிந்திருப்பீர்கள். (மலையில்) ஆறு உற்பத்தியாகும் இடத்தில் அதனுடைய அகலம் குறைவாக இருக்கும், பின்னர் அதன் அகலம் பெரிதாகிவிடும்.

*உதாரணம்-*




y என்பது ஆறு உற்பத்தியாகுமிடம். x என்பது ஆறு முடிவடையும் இடம். இப்போது நீங்கள் கூடிய விளக்கம் பெற்றிருப்பீர்கள்.


### பரப்பளவு

தேசப்படத்தில் நிச்சயம் கேட்கப்படும் ஒரு வினா, அப்பிரதேசத்தின் பரப்பளவு யாது என்று. அதிக மாணவர்கள் இதில் தவறுவிடுவது காணக்கூடியதாகவுள்ளது. அளவுத்திட்டம், தேசப்படத்திற்கு 1:50000 என்பது நீங்கள் அறிந்ததே ($1cm = {}^1/_2 km$). அதன்படி பரப்புக் காண்பது மிக இலகுவானதாகும். அவ்வகையில் பிரதேசத்தின் நீளம் x அகலம் என்பதை நீங்கள் உங்களது cm அளவுகோலின் மூலம் அறிந்துகொள்ளலாம். அதன்படி இரண்டையும் பெருக்கி, 4 ஆல் வகுத்தல்மூலம் பரப்பளவைக் காணலாம் அல்லது நீளத்தினை அளந்து அதை இரண்டால் வகுத்து, பின் அகலத்தினை அளந்து, அதனை 2 ஆல் வகுத்து வரும் விடைகளினைப் பெருக்கினாலும் பரப்பளவினை அறிந்துவிடலாம். பரப்பளவு விடை கொடுக்கும்போது $km^2$ அல்லது சதுர km கட்டாயம் இடுதல் அவசியம்.

*உதாரணம்-* $18km^2$ அல்லது 18 சதுர km

**விளக்கம்:**

4 cm



4 cm

நீளம் x அகலம்
4cm x 4cm
2Km x 2Km
அளவுத்திட்டத்தின்படி $4Km^2$ / 4 சதுரKm


### பயிர்ச்செய்கை

தேசப்படத்தில் A எனப் பெயரிட்டு, அவ்விடத்தில் பயிரிடக்கூடிய பயிர் எது? என்று கேட்கப்படும் (குறியீடு இன்றி) உயரங்களைக் கொண்டு அவற்றினை அறிந்து விடை எழுதலாம்.

300 m இற்கு மேற்பட்ட பிரதேசத்தில் A என இலக்கமிடப்பட்டு, அங்கு எப்பயிர் பயிரிடப்படுகின்றதென்றால் தேயிலை, இறப்பர் எனவும்,

100 - 300 m இடையில். என்றால் இறப்பர், தென்னை எனவும், 100 m கீழ் என்றால் தென்னை எனவும் விடையளிக்க முற்படவேண்டும்.

**விளக்கம்:**




A என்னுமிடத்தில் தேயிலை, இறப்பரும்.
B என்னுமிடத்தில் தென்னையும் பயிரிடப்படுகின்றன.


### குடியிருப்பு

ஒரு பிரதேசத்தினை வைத்துக்கொண்டும் பண்பாட்டு பௌதீக அம்சங்களைக் கருத்திற்கொண்டும்- எவ்வாறான குடியிருப்பு என அறிந்துகொள்ளமுடியும்.

கடற்கரைப் பிரதேசத்தில் குடியிருப்புகள் இருந்தால், அக்குடியிருப்புக்கள் மீனவக் குடியிருப்பு எனவும், தேயிலைத் தோட்டங்களுக்கு அண்மையில் குடியிருப்புகள் இருந்தால், அங்கு வாழும் குடிமக்களது தொழில் (அதிகமாக) பெருந்தோட்டம் எனவும் அறிந்துகொள்ளமுடியும்.

இதுவரையும் பெற்ற அனுபவத்திலிருந்து கீழ்வரும் பயிற்சியினைச் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

**பயிற்சி** 10 cm





10 cm

1:50000

1. (அ) 1:50000 என்னும் நேர்கோட்டு அளவுத்திட்டத்தினை வரைக.
   (ஆ) 300 m இற்கு மேற்பட்ட பிரசேத்திற்கு இளங்கபில நிறம் தீட்டுக.
2. பிரதான மலைத்தொடரில் உற்பத்தியாகி, கிழக்கு எல்லையினைச் சென்றடையும் இரண்டு நதிகளை வரைக.
3. பிரதான ஆற்றுடன் இணையும் இரண்டு கிளை நதிகளை வரைக.
4. A- 8, x - y, p - Q என இலக்கமிடப்பட்டுள்ள தரைத்தோற்ற அம்சங்களினைப் பெயரிடுக.
5. 1-2 என இலக்கமிடப்பட்டுள்ள சாய்வு யாது என எழுதுக.
6. (i) பிரதான வீதியினுடைய நீளம் யாது?
   (ii) பாலம் ஒன்றினை வரைக?
7. பிரதேசத்தினுடைய பரப்பளவு யாது?
8. z, c என்ற இடங்களில் பயிரிடக்கூடிய பயிர்கள் எவை?
9. மலைத்தொடர் எத்திசை நோக்கி சாய்ந்துள்ளது?
10. c ஏறுமிடத்தில் பௌத்தகோயில், பாடசாலை, தபாற்கந்தோர், வைத்தியசாலை போன்றவற்றை உரிய நிறத்துடன் வரைக.
11. இப்பிரதேசத்தில் காணப்படும் எல்லை யாது? அந்த எலலைக்குச் சமாந்தரமாகவும், தென்புறமாகவும் ஒரு வீதியை வரைக.
12. s என்னுமிடத்தில் 1 சதுர km கொண்ட நெல்வயல் ஒன்றை வரைக.
13. பிரதான வீதிக்குச் சமாந்தரமாகக் கிழக்குப் புறமாக ஒறறையடிப் பாதையை வரைக.

**பயிற்சி விடைகள்** 10 cm




10 cm

1:50000

1. (அ)




   (ஆ) பிரதேசத்தில் 300 m இற்கு மேற்பட்ட இடங்களை இனங்கண்டு இளங்கபில நிறம் தீட்டல்வேண்டும் (படத்தில் காட்டியவாறு).
2. படத்தில் காட்டப்பட்டுள்ளது.
3. படத்தில் காட்டப்பட்டுள்ளது.
4. A - B - குவிவுச்சாய்வு, X-Y - குழிவுச்சாய்வு P-Q கணவாய்
5. 1-2 குத்துச்சாய்வு (செங்குத்துச்சரிவு)
6. (i) பிரதான வீதியின் நீளம் = 10cm = 5Km
   (ii) படத்தில் காட்டப்பட்டுள்ளது.
7. 25 சதுர km/ $25km^2$.
8. z- தேயிலை, இறப்பர். c - தென்னை.
9. தென் மேல் திசைநோக்கி.
10. படத்தில் காட்டப்பட்டுள்ளது (உரிய நிறந்தீட்டுக).
11. மாகாண எல்லை (உரிய நிறந்தீட்டுக).
12. படத்தில் காட்டப்பட்டுள்ளது.
13. படத்தில் காட்டப்பட்டுள்ளது.

**S.சிவசங்கர்**

# கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரணதரம்) முன்மாதிரி வினாத்தாள்

## கணிதம் I

1. 3.584 - 1.02 ஐக் கழிக்குக.
2. $(-3)^3$ இன் பெறுமானத்தைக் காண்க.
3. 25 கொப்பிகளின் விலை ரூ.500 எனின், கொப்பி ஒன்றின் விலையைக் காண்க.
4. ஒரு தொகுதியில் வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கை 10,238 ஆகும். இதில் செல்லுபடியாகத வாக்குகளின் எண்ணிக்கை 2075 எனின், செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை யாது?
5. என்னிடம் ரூ. A உள்ளது, எனது தங்கையிடம் ரூ.10 உள்ளது. இருவரிடமும் உள்ள பணத்தொகைகளின் மொதத்தைக் காட்டும் ஓர் அட்சர கணிதக் கோவையை எழுதுக.
6. ஒவ்வொரு பாடசாலைக்கும் சம எண்ணிக்கையான கதிரைகள் கிடைக்குமாறு, 1613 கதிரைகளை 5 பாடசாலைகளுக்கிடையே பங்கிடும்போது, ஒரு பாடசாலைக்குக் கிடைக்கத்தக்க கதிரைகளின் உயர்ந்தபட்ச எண்ணிக்கையையும், அப்போது எஞ்சியிருக்கும் கதிரைகளின் எண்ணிகையையும் காண்க.
7. ஏறுவரிசையில் எழுதுக.
   1 1/4, 0.32, 2/3
8. $a = 4, b = -3$ எனின், $2a - 3b^2$ இன் பெறுமானத்தைக் காண்க.
9. தீர்க்க.
   $$2p - 5 (p+2) = 5 -2p$$
10. $x= \{1,4,9,16\}$ இதனை வேறு தொடைக் குறியீட்டுமுறையில் காட்டுக.
11. மூலங்கள் 3, -4 ஆன இருபடிச் சமன்பாட்டினை எழுதுக.
12. 'இரு சமபக்கச் செங்கோண முக்கோணி ஒன்றின் கோணங்களில் பெரிய கோணத்தின் பெறுமானம் $90^0$ ஆகும்.' இவ்வுண்மையைக் காரணங்களுடன் உறுதிப்படுத்துக.
13. செவ்வகவடிவத் தாள் ஒன்றின் நீளம் 16 cm உம், அகலம் 6.25 cm உம் ஆகும். இச்செவ்வகத்தின் பரப்பளவுக்குச் சமனான பரப்பளவுள்ள ஒரு சதுரவடிவத் தாளின் பக்கம் ஒன்றின் நீளத்தைக் காண்க.
14. எனது சகோதரர்களின் எண்ணிக்கையும், சகோதரிகளின் எண்ணிக்கையும் சமம் எனக் குடும்பம் ஒன்றிலுள்ள ஆண்பிள்ளை ஒருவர் கூறுகிறார். எனது சகோதரர்களின் எண்ணிக்கை, சகோதரிகளின் எண்ணிக்கையின் மும்மடங்கு என, அக்குடும்பத்தின் பெண்பிள்ளை கூறுகிறார். இவ்விரு கூற்றுக்களும் உண்மையானவை எனக் கொண்டு, இக்குடும்பத்தில் இருக்கும் ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கையையும், பெண்பிள்ளைகளின் எண்ணிக்கையையும் காண்க.
15. சுருக்குக.
   $1101_{இரண்டு} - 111_{இரண்டு}$
16. x, 3x, 5x ..... என்னும் கூட்டல்விருத்தியின் 6 ஆம் உறுப்பைக் காண்க.
17. ரூ.500 என விலை குறிக்கப்பட்ட குறித்த பொருளொன்றை விற்கும்போது, கடை M ஆனது 25% கழிவைக் கொடுக்கின்றது. ரூ.510 என விலை குறிக்கப்பட்ட அதேவகைப் பொருள் ஒன்றை விற்கும்போது, R ஆனது 30% கழிவைக் கொடுக்கிறது. இப்பொருளை எக்கடையிலிருந்து வாங்குதல் மிகவும் இலாபகரமானது.
18. தரப்பட்டுள்ள நேர்கோடு MR இலிருந்து 2cm தூரத்தில் இருப்பதும், புள்ளி M இலிருந்து 3cm தூரத்தில் இருப்பதுமான நான்கு புள்ளிகள் உள்ளன என, பரும்படி வரிப்படத்தின்மூலம் காட்டுக.

   M ———————— R

19. உருவில் செங்கோண முக்கோணி LMN காணப்படுகிறது. அதில் LM, MN என்னும் பக்கங்களின் நீளங்கள் முறையே 7cm, 11cm ஆகும். முக்கோணி LMN இன் பரப்பளவு சதுர சென்ரிமீற்றரில் யாது?




**S.S.கண்ணன்**

(தொடரும்...)

ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

மக்களே போல்வர் கயவர் அவர் அன்ன
ஒப்பார் யாம் கண்டது இல்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## கனவுலகில் ஒரு "கனவான்"

தமிழ்மக்களின் விடுதலைக்கான போராட்டத்தைக் கடந்த காலங்களில் நேரடியாகவும், வஞ்சகத்தனமாகவும் நசுக்க முயன்ற இந்திய ஆளும் வர்க்கம் - இன்னமும் தனது சூழ்ச்சிப் போக்கிலிருந்து வெளியேறவில்லை என்பது - இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவரும், இந்திய வெளியுறவு அமைச்சின் ஆலோசகருமான ஜே.என்.டிக்ஷிற்றின் வாயிலாக இன்னொருமுறை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்மக்கள் தமக்கென சுதந்திரமான, தன்னாட்சியுள்ள ஆட்சியமைப்பை வேண்டிநிற்பதன் வரலாற்றுத்தேவையை, நியாயத்தை - சர்வதேசமே அனுதாபம் கொண்டு நோக்கும் போது,

இந்திய ஆளும்தரப்பு - தமிழ்மக்கள் உரிமை பெற்று வாழ்வதைத் தடுப்பதற்கு, எத்தகைய இடர்களையும் விளைவிக்கத் தயாராயிருப்பதை - டிக்ஷிற் தனது கருத்துக்களால் வெளியிட்டிருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் புலிகளால் தனியானதொரு அரசாங்கம் அமைக்கப்படுவதைத் தடுப்பதற்கான தலையீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இன்னமும் இந்தியாவுக்கு இருப்பதாகக் கூறியிருக்கும் டிக்ஷிற் -

இந்த விடயம் பற்றி இந்தியா ஆழமான கவனம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

டிக்ஷிற்றினது இந்தக் கருத்துக்கள் - இந்தியத் தரப்பு- இலங்கை இனப்பிரச்சினையை எவ்விதமாக நோக்குகின்றது என்பதோடு, அதன் - ஆதிக்க மனப்பான்மை எந்தளவு தூரத்திற்கு வியாபிக்கும் ஆர்வத்தோடு காத்திருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

வெளிப்பார்வைக்கு - இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திலிருந்து ஒதுங்கியிருப்பதாகக் காட்டிக்கொண்டு - உள்ளே - ஏராளம் குள்ளநரித்தனங்களைச் செய்யும் குயுக்தியை இந்தியா கடைப்பிடித்துவருவது அண்மைக்காலமாகவே பகிரங்கமாகி வருகின்றது.

இதன் சமீபத்திய நகர்வுகளாக - ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்திய விஜயமும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் ஆனந்தசங்கரியை, அப்பொறுப்பிலேயே தக்கவைத்திருக்க இந்தியா கூட்டணித் தலைவர்களுக்கு கொடுத்த அழுத்தங்களும் மிகமுக்கியமானவையாகும்.

இலங்கை விவகாரத்தில் - குறிப்பாகத் தமிழர் தரப்பின் தனக்கென கையாட்களை வைத்துக்கொள்வதில் தீவிர முயற்சிகளை இந்தியா மேற்கொள்வது புதிதான விடயமல்ல. என்றாலும் - 'உருத்திராட்சப் பூனையாக' உலகுக்கு ஒரு முகமும், உள்ளுக்குள் இன்னொரு முகமுமாக இந்தியா செயற்படுவது - அதன் இலக்குகள் பற்றி, தமிழினம் விழிப்பாக இருக்கவேண்டியதன் அவசியத்தைத்தான் வலியுறுத்தி நிற்கிறது.

டக்ளஸ் தேவானந்தா வெளிப்படையாகச் சொல்லும் அறிவிப்புக்களும், கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியுடன் தொடர்புடைய, சொல்லாத செய்திகளும் - இந்தியா, இலங்கை விவகாரத்தில் தனது தலையீட்டையோ, மூக்கு நுழைப்பையோ தணித்துக் கொள்ளப்போவதில்லை எனக் காட்டியிருக்கின்றபோது-

டிக்ஷிற் வெளியிட்டிருக்கும் கருத்துக்களும் இந்தியாவின் தலையீடு, வலுவானதொரு தொடர்கதையாக இருக்கப் போவதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அதேவேளை - டிக்ஷிற் தனது தூதுவர் காலங்களில் கொழும்பில் வெளிப்படுத்திய 'இந்தியாவின் வைஸ்ராய்' போன்ற ஆதிக்கத் தன்மையை - ஏறத்தாழ பதினாறு வருடங்களின் பின்னரும், மீண்டும் வெளிப்படுத்தலாம் எனத் துணிந்து நிற்பதுதான் மற்றுமொரு சுவாரசியமாகும்.

அமைதிப்படை இலங்கையிலிருந்தபோது - டிக்ஷிற் நடாத்திய அட்டகாசமும், அடாவடியும் - இன்று கிழடுதட்டிப் போன நேரத்திலும் அவரிடமிருந்து வெளிப்படுவது, அவருக்குச் சரியாக இருக்கக்கூடிய, வாய்ப்புக்களைக் கொண்டிருந்தாலும் -

மறுபுறத்தில் - தமிழர் தரப்பு அவரது 'வைஸ்ரோய்' மனப்பாங்குக்கு 'ஆடிப்போகும்' என்ற கனவு, கலைந்துபோய் வெகுகாலமாகிவிட்டதை அவர் உணராதிருப்பது - டிக்ஷிற்றின் ராஜதந்திரப் புலமையைச் சந்தேகிக்கவைக்கின்றது.

1987 களில் - தமிழர் தரப்பு கொண்டிருந்த பலம் - இன்று பன்மடங்காகி, கனரக ஆயுதங்களும், படையணிகளுமாக தமிழ்த்தேசியப் படையாக - ஒருநாட்டின் படைகளுக்குரிய அத்தனை அம்சங்களுடனும் பல்கிப் பெருகியிருக்கின்றபோது-

அந்தப் பலத்தின் அடிப்படையாலேயே இன்று சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகவதற்கான தேவை இலங்கை அரசாங்கத்துக்கு எழுந்தபோது -

டிக்ஷிற் - இன்னும் பழைய தர்பார் நடத்த எத்தனிப்பது- வேடிக்கையானதே.

அத்தோடு - இலங்கையில் நடைபெறும் அமைதி முயற்சிகள் வலுவிழந்து, மற்றுமொரு யுத்தம் தோன்றவேண்டும் என்ற அவாவும் அவருக்குள் விரவியிருப்பதை -

'அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கிடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் - இன்று அமைதிமுயற்சிகளை முன்வைத்துப் பேசும் பிரதமர் ரணிலை, இணக்கப் பேச்சுக்களிலிருந்து விலகி தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வார்' என்ற அவரது கருத்தும் எடுத்துச் சொல்கின்றது.

இது - டிக்ஷிற்றின் ராஜதந்திர எதிர்வுகூறல் என்பதா? அல்லது அவரது ஆழ்மன விருப்பமா? என்பதும் ஆராயப்பட வேண்டியதாகிறது.

# 1983 ஜூலைக் கலவர அழிவுகளுக்காக

# தென்னிலங்கைப் பெண்கள் அமைப்பு தமிழ்மக்களிடம் மன்னிப்புக் கோரியது!

(கொழும்பு)

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைகளுக்காக, தாங்கள் மன்னிப்புக் கோருவதாக - 'இலங்கையின் தாய்மாரும் புதல்விகளும்' **(Mothers and Daughters of Lanka)** என்ற அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த அமைப்பின் இணைப்பாளர் துஷாறி மடகப்பேல இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருப்பதாவது,

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் - தமிழ்ப் பெண்கள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள், மிகவும் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டமைக்கு ஆழ்ந்த மனவருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

இந்தப் படுகொலை, அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை. மிகத் திட்டமிடப்பட்டு, தமிழ்மக்கள் மீது இந்தப் படுகொலை நிகழ்த்தப்பட்டது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம், தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த, நண்பர்களை இழந்த, வீடுகள் - சொத்துக்களை இழந்த அனைத்துத் தமிழ்மக்களுடனும் நாங்கள் ஆழ்ந்த மனவேதனையைப் பகிர்ந்துகொள்கின்றோம்.

அன்று நடந்த மிகப்பெரும் துயரமே, இந்த நாட்டைவிட்டு ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை அகதிகளாக அலைந்து திரியவும் வைத்தது. தமிழ் இனத்தில் மிகப்பெரும் வலியை ஏற்படுத்தியது, 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதமாகும்.

அன்று, தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழத்துவிடப்பட்டபோது, எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது மௌனமாக இருந்த அரசாங்கம் மீது, நாங்கள் எமது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்துயரம் நடைபெற்று இருபது ஆண்டுகளுக்குப் பின்னர், இன்றைய சமாதானச் சூழ்நிலையில் - இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணும் நோக்கில் நகருகின்ற அமைதி முயற்சிகளில், நாங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற வேளையில் - தமிழ்மக்களினது மனத்துயரில் நாமும் பங்கெடுத்துக்கொள்கின்றோம், எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புளியங்குளத்திற்கு மின்விநியோகம்; சூனியப்பகுதி மிதிவெடிகளால் தடை!

வவுனியாவிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான புளியங்குளத்திற்கு - மின்சார இணைப்புக்களை மேற்கொள்வதற்காக, ஐரோப்பிய யூனியன் 22 மில்லியன் ரூபா ஒதுக்கியிருந்தபோதும், ஓமந்தையில் - படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சூனியப் பிரதேசத்தில - மிதிவெடிகள் அகற்றப்படாமையினால், அந்தப் பணியை முன்னெடுத்துச் செல்லமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் எஸ். பிரபாகரன்-

தற்போது, இத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மற்றுமொரு பகுதியான விளக்குவைத்தகுளம் பகுதிக்கு மட்டுமே, ஏ-9 வீதியூடாக மின்சாரத்தை எடுத்துச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும்,

அதற்கு அப்பால் - புளியங்குளம் வரையில் மின்சார விநியோகத்தை மேற்கொள்வதற்கு - படையினருக்கும், புலிகளுக்கு மிடையிலான சூனியப்பகுதியில், மிதிவெடிகள் இதுவரையில் அகற்றப்படாமல் இருப்பது, பெருந்தடையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டும், உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் பொறியியலாளர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த விவகாரம் பற்றிக் கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் - ஓமந்தையில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பகுதியில், மிதிவெடிகள் அகற்றுவது பற்றி இரு தரப்பிடமும் தொடர்பு கொள்ளப்பட்டிருப்பதாகவும்,

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில், இந்தப் பணியை முன்னெடுப்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# மனித மேம்பாட்டு கல்விக் கருத்தரங்கு

(உடுவில்)

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளில், தரம் ஒன்று முதல் ஐந்து வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மனித மேம்பாட்டு கல்விக் கருத்தரங்கு - கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெற்றது.

சத்தியசாயிபாபா கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் - அன்பு, தர்மம், அஹிம்சை, சாந்தி, சமாதானம் என்பவற்றை மாணவர்களுக்கு அறிவுறுத்தி, மனித நேயத்தை வளர்க்க எல்லோரும் ஒன்றுபடவேண்டுமென, அங்கு கருத்துரை வழங்கிய பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) கேட்டுக் கொண்டார்.

மேலும் - இந்த நிகழ்ச்சிகளை மாதம் இருமுறை சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை, உடுவில் கோட்டங்களில் நடத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது. (101)

# களனிப் பல்கலைக்கழகத்துக்கு காலவரையறையற்ற மூடுவிழா!

இரு தரப்பினர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து நேற்று முன்தினம் மாலை முதல் களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் தவிர்ந்த ஏனைய பீடங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டன.

இதையடுத்து - மூடப்பட்டுள்ள பீடங்களின் தலைவர்கள் அனைவருக்குமான விசேட கூட்டம் ஒன்றுக்கு துணைவேந்தர் அழைப்பு விடுத்துள்ளார்.

பல்கலைக்கழகத்தை மீண்டும் திறந்ததும், பிரச்சினை இன்றி அதனைக் கொண்டுநடத்த மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இப்பேச்சுவார்த்தையின்போது விசேட கவனம் செலுத்தப்படும் என்று உபவேந்தர் பேராசிரியர் திலகரத்ன கப்புகமகே தெரிவித்தார்.

எனினும், பல்கலைக்கழகத்தை மீண்டும் திறப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இப்போதைக்கு இடம்பெறமாட்டாது என்று, அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, களனிப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்தை, அனைத்துப் பல்கலைகழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இவ்வாறான சூழலைக், கட்டுப்படுத்தப்படாத பட்சத்தில்- அது பல்கலைக்கழக மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று ஒன்றியத்தின் அமைப்பாளர் ரவீந்திர முதலிகே தெரிவித்தார்.

# திருநெல்வேலியில் வரலாறு படைத்த லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மான்!

பல்வேறு நெருக்கடிக்கு மத்தியிலும் தமிழ்மக்களின் நல்வாழ்வுக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதுடன், தன்னிடமிருந்த பொருள் வளத்தையும் வழங்கி, போராட்டம் வெற்றி பெற உழைத்தவர்தான் செல்லக்கிளி அம்மான்.

தமிழ் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் - சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடன் பல்வேறு வகையான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு - ஒப்பந்தங்கள் செய்து, அவை யாவும் கிழித்தெறியப்பட்டு, அடுத்த கட்டடம் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்த நேரம்,

அஹிம்சைப் போராட்டம் - எமக்கோ எமது மக்களுக்கோ நிரந்தர விடிவைத் தரப்போவதில்லை என்ற உண்மையை உணர்த்த ஒரு சில இளைஞர்கள், ஆயுதப் போராட்ட முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அரசியல் தலைவர்களின் பின்னால் அவர்களை நம்பி ஒரு சில இளைஞர்கள் சென்றுகொண்டிருந்தார்கள். ஆனால், செல்லக்கிளி அம்மான் - தலைவரின் கொள்கையை நம்பி, அவருடன் சென்று கொண்டிருந்தார்.

ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்துவதாக இருந்தால், அதற்கு ஆயுதம் வேண்டும். பணத்தை யாரிடம் பெறுவது என்ற நெருக்கடி. இத்தகைய சூழ்நிலையில் - தான் வளர்த்துக் கொண்டிருந்த இரண்டு காளைமாடுகளை விற்று, ஆயுதம் வாங்கப் பணம் கொடுத்து, போராட்டம் வலுப்பெற பங்களிப்புச் செய்தார் செல்லக்கிளி அம்மான்.

ஆரம்பத்தில் - கெரில்லா வாழ்க்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த செல்லக்கிளி அம்மானின் நடவடிக்கையால், பொலிஸ் மற்றும் இரகசியப் பொலிஸாரின் பார்வையும் அவர்மீது விழத் தவறவில்லை.

பொலிஸாரையும், சி.ஐ.டியினரையும் ஏமாற்றிக்கொண்டு, தமிழ்மக்களின் போராட்டத்தை முன்னெடுக்கும் இளைஞர்களை வேட்டையாடுவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸாரை - வேட்டையாடுவதில் செல்லக்கிளி அம்மான், கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்.

ஆரம்பத்தில், கெரில்லா முறையில் பொலிஸார், பொலிஸ் வாகனங்கள் மீதான தாக்குதல்கள் என்று ஈடுபட்டுக்கொண்டு இருந்தவர்கள், 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி, திருநெல்வேலி தபாற் பெட்டிச் சந்தியில் இராணுவ

**இன்று லெப்ரினன்ட் செல்லக்கிளியின் 20 ஆவது ஆண்டு நினைவுதினமாகும்.**

வாகன அணிமீது தாக்குதலை மேற்கொண்டு, உலகநாடுகளை தமிழ் மக்களின் பிரச்சினையின்பால் கவனத்தைத் திருப்பி வைத்தனர்.

இத்தாக்குதலானது, லெப்ரினன்ட் செல்லக்கிளியின் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதலில் 13 இராணுவத்தினர் உயிரிழந்தனர். செல்லக்கிளி தன்னையும் இந்தத் தாக்குதலில் ஆகுதியாக்கிக் கொண்டார்.

இன்று - தமிழ்மக்களுடைய போராட்டம் வளர்ச்சியடைந்து, சர்வதேசமும் தமிழ்மக்களின் பிரச்சினையின்பால் அக்கறை கொள்ளச் செய்தமைக்கு, ஜூலை 23 ஆம் திகதிய தாக்குதல் ஒரு முக்கிய ஆரம்பமென்பதை மறுக்கமுடியாது.

# வாடி வதங்கி நிற்கிறது

எந்தவொரு இனமும் தனது இருப்பினை உறுதிப்படுத்திக்கொள்ளவும், உலகில் தனித்துவம் மிக்க இனமாகத் தன்னை வளர்த்துக் கொள்ளவும் வேண்டுமாயின் - தனது பாரம்பரியங்களையும், கலாசாரத்தையும் பேணிப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

அத்துடன் - தனது வரலாற்றை நன்கு வரையறுத்துக்கொள்வதுடன், அந்த இனத்தின் மொழியின் தொன்மையைக் கண்டறிந்து அதை உலகிற்கு நிரூபித்துக்காட்டவும் வேண்டும். இதற்காகவே, புதைபொருள் ஆராய்ச்சிகளும், தொல்லியல் ஆராய்ச்சிகளும் இடம் பெறுவதுடன், அவை இன்றும் முக்கியத்துவம் பெற்று நிற்கின்றன.

அந்த வகையில், உலகில் தோற்றம்பெற்றவையே 'நூதனசாலைகள்' ஆகும். இந்த நூதனசாலைகளில் காணப்படும் பொருட்கள் - குறித்த இடத்தினதோ அல்லது இனத்தினதோ தொன்மையையும், வரலாற்றுச் சிறப்பினையும், நாகரிக வளர்ச்சியினையும் எடுத்து விளக்குபவையாகக் காணப்படுகின்றன. இதனாலேயே சமூகத்தில் இந்த நூதனசாலைகள் (அருங்காட்சியகங்கள்) நவீன வசதிகள் கொண்டவையாகப் பேணிப்பாதுகாக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலும் - தமிழரின் வரலாற்றினையும், தமிழினம் தனக்கெனக் கொண்டிருந்த தனி அரசினைப் பற்றியும் - பல தொல்பொருட்களைக் கொண்டதாக ஒரு அருங்காட்சியகம் இருக்கின்றது என்பது, யாழ்ப்பாணத்தவர் பலருக்கே ஆச்சரியமாக இருக்கும். ஆயினும், இந்த அருங்காட்சியகம் 1975 ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகின்றது என்பது, மேலும் ஆச்சரியம் தரும் விடயம். 1986 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இயங்கி வந்த இந்த அருங்காட்சியகம், நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழலின் காரணமாக - அங்கிருந்து இடம்பெயர்ந்து, அருங்காட்சியகத்துக்கென ஆனைப்பந்திச் சந்தியில் இருந்து கிழக்கே - நாவலர் வீதியில் உள்ள, நாவலர் கலாசார மண்டபத்து வளவில் அமைக்கப்பட்ட கட்டடத்துக்கு மாற்றப்பட்டது.

1975 ஆம் ஆண்டில் இந்த அருங்காட்சியகத்துக்கென 12 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அன்றிலிருந்து இன்றுவரை, அவர்களே இங்கு கடமையாற்றிவருகின்றனர் என்பது மேலும் ஆச்சரியம் தரும் விடயம்.

தற்பொழுது, இவர்கள் ஓரிரு வருடங்களில் ஓய்வில் சென்றுவிடும் நிலையில் இருக்கின்றனர். புதியவர்கள் எவரும் இதுவரை இங்கு நியமிக்கப்படவில்லை.



பிரதான வீதியிலிருந்து, தற்போதைய இடத்திற்குப் புதைபொருட்களை - குண்டு வீச்சுக்கும் மத்தியில் கொண்டுவந்து சேர்த்ததை இவர்கள் கதைகதையாகச் சொல்கின்றனர். மேலும், தங்களின் பின் புதியவர்களை நியமிப்பதன் மூலம் இவற்றினைப் பாதுகாக்க முடியும் என்பதும், இவர்களது ஆதங்கம்.

இத்தனை போர்ச் சூழல்களின் மத்தியிலும் அங்கு பாதுகாக்கப்பட்டுவரும் அரும்பொருட்கள் - திருட்டுப்போகவோ அன்றி அழிவடையவோ இல்லையாயினும், கட்டடம் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

மழைக் காலங்களில் அருங்காட்சியகம் முழுவதும் வெள்ளத்தில் மிதக்கின்றது. கட்டடம் 1975 ஆம் ஆண்டில் கட்டப்பட்டபோது, பயன்படுத்தப்பட்ட களிமண்ணாலான வளைந்த கூரைத் தகடுகளே இன்றும் உள்ளன. பல ஆண்டு காலமாக, இதே அருங்காட்சியகம் திருத்தப்படவோ, புனரமைப்புச் செய்யப்படவோ இல்லை.

ஊழியர்கள் இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்தும், இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையென அவர்கள் தெரிவிக்கின்றனர். அருங்காட்சியகத்தின் பாதி இருளிலேயே இருக்கின்றது. இதனால், அங்குள்ள பொருட்களை ஒழுங்காகப் பார்வையிடக்கூட முடிவதில்லை. இவ்வாறாக நூதனசாலையின் (அருங்காட்சியம்) கட்டடமும் ஒரு பழமை நிறைந்த அருங்காட்சிப் பொருளாகவே மாறிக்கொண்டிருக்கிறது.

அடுத்து, இங்குள்ள பொருள்களை நோக்கின் - பல்வேறுபட்ட காலத்துக்குரிய அருங்காட்சிப் பொருட்கள் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதனை விட, சங்கிலி மன்னனது சில பாவனைப் பொருட்களும் இங்கு பாதுகாக்கப்பட்டு வருவதோடு, கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பல அரும்பொருட்களே இங்கு அதிகளவில் உள்ளன. அத்துடன், நிலாவரை, திருக்கேதீஸ்வரம், ஜமுனா ஏரிப் பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்ட பொருட்களும் இங்குண்டு.

இந்த நூதனசாலைக்குப் பொறுப்பானவர் தகவல் தருகையில் - 1983 ஆம் ஆண்டுவரையே தாம் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டதாகவும், அதன்பின் நாட்டுச் சூழ்நிலை காரணமாக, தாம் அகழ்வாராய்ச்சிப் பணிகளை நிறுத்திக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக துறைசார் விரிவுரையாளர்களாலும், மாணவர்களாலும் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிகளின்போது, கிடைக்கும் புதைபொருட்கள் பல்கலைக்கழகத்திலேயே பேணப்பட்டு வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.





## யாழ்.நூதனசாலை

**ஓர் சந்திப்பு - இயேசு**

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், அகழ்வாராய்ச்சி மேற்கொண்ட காலத்தில் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்ட பல புதைபொருட்கள் மறைக்கப்பட்டுவிட்டன. ஏனெனில், இவ்வாறான புதைபொருட்கள் கிடைக்கும் இடங்களை அரசு சுவகரித்துக் கொள்ளும். இதனால் தமது நிலங்கள் பறிபோய்விடும் என்ற பயத்தில், பலர் இவ்வாறான புதைபொருட்களை மறைத்துவிட்டனர். எனவே இவை எமது கைகளுக்குக் கிடைக்காமல் போயுள்ளன, எனவும் தெரிவித்தார்.

இங்குள்ள பொருட்கள் தொடர்பான விபரங்களை ஆங்கிலத்தில் மட்டுமே காணக்கூடியதாகவுள்ளது.

இது தொடர்பாகக் கேட்டபோது -

கனடாவில் இருந்துவந்த வெள்ளைக்கார மாணவியொருவர், தனது கல்வி சம்பந்தமான ஆய்வுக்காக அருங்காட்சியகத்துக்கு வந்ததாகவும்- இதன்போதே இந்தப் புதைபொருட்களின் விபரங்களை அறிந்து, கணினியில் பதிப்பித்துத் தந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. தமிழில் இதன் விபரங்களை எழுதி ஒட்டுவதற்கு எவ்வித வசதியும் இல்லை என்றும் - இது தொடர்பில், யாழ்.பல்கலைக்கழக துறைசார் விரிவுரையாளர்கள், மாணவர்களிடம் தெரிவித்ததாகவும் -

அவர்கள் இது தொடர்பான விபரங்களை அச்சிட்டுத் தருவதாகக் கூறியபோதிலும், இதுவரை அவை எவையும் தமது கைக்குக் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

நூதனசாலைக்கு முன் கட்டுமரங்களை அடுக்கி வைத்தது போன்று, ஏதோ ஒன்று வெளி முற்றத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பாக வினவியபோது - ஆச்சரியம் காத்திருந்தது.

அது, 1946 ஆம் ஆண்டில் கொழும்புத் துறையில் இறந்தபடியே கரையொதுங்கிய ஒரு திமிங்கிலத்தின் எலும்புக்கூடு என்பது விடையாகக் கிடைத்தது. சுமார் 15 அடி நீளம் கொண்டதாக இந்த எலும்புக்கூடு இருக்கின்றது. ஏறக்குறைய 59 வருடங்கள் பழமை வாய்ந்ததான இந்த எலும்புக்கூடு, வெட்ட வெளியில் மழையிலும் வெயிலிலும் உரிய பராமரிப்பு இன்றி இருந்தமையே, அழிவடையக்கூடிய நிலை வந்தமைக்குக் காரணம்.

இவ்வாறாக - நூதனசாலையில் உள்ள பொருட்கள் தொடர்பாக பல நடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்படவேண்டியுள்ளது.

அதாவது, இங்குள்ள பொருட்களைப் பாதுகாக்க நவீன வசதிகள், வெளிச்ச வசதிகள் என்பன ஏற்படுத்தப்படவேண்டும். மேலும், இங்குள்ள பொருட்களின் விபரங்கள் தமிழிலும், ஏனைய மொழிகளிலும் தெளிவாக எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் தொடர்பாக இங்குள்ள ஊழியர்கள் மீது பழியைப் போட்டுவிட்டு எவரும் தப்பிவிட முடியாது. ஏனெனில், இதுவொரு சமூகப் பொறுப்பு. எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவரும் விரைந்து நடவடிக்கை எடுக்கவோ, உதவவோ முன்வருதல் வேண்டும்.

*(நாளை தொடரும்)*

# பாழ்பட்டு நிற்கும் தென்மராட்சி

**செய்திக் கட்டுரை**



"வந்தாரை வாழவைக்கும் வளமிகு தென்மராட்சி இந் நாளில் பொலிவிழந்து இருக்கும் நிலை காண்பீரோ".

ஈழமணித்திருநாட்டின் வடபால், ஈழமாதாவின் சிரசெனமிளிரும் யாழப்பாணப் பட்டினத்தின் தென்பகுதியில் விளங்குவது தென்மராட்சிப் பிரதேசம். தென்னை, பனை, மா, பலா, கமுகு எனப் பயன்தரு மரங்கள் நிறைந்த சோலைகளையும், செந்நெல் விளையும் பெருவயல் நிலங்களையும் தன்னகத்தே கொண்டது இப்பிரதேசம்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகங்களில், அறுபது கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட, மிகப்பெரிய பிரிவாக இது விளங்குகின்றது.

தமிழர் தாயகப் பகுதியில், கடந்தகாலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால், மிக மோசமான பாதிப்புக்களையும், யுத்த வடுக்களையும் கண்டது தென்மராட்சிப் பிரதேசம் என்றால், அது மிகைப்படுத்தப்பட்டதல்ல.

2000 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் - இப்பிரதேசத்தில், 19,673 குடும்பங்களைச் சேர்ந்த 72,071 பேர் வாழ்ந்தனர். 2003.06.30 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதியில்- 19,201 குடும்பங்களைச் சேர்ந்த 69,753 பேர் மீளக் குடியேறியுள்ளனர். ஏறத்தாழ 450 பேர்வரை உயிரிழந்தும், 250 பேர் வரை அங்கவீனமுற்றுள்ளனர். 9689 வீடுகள் - முழுமையாகப் பாதிக்கப்பட்டும், 9291 வீடுகள் பகுதியாகப் பாதிக்கப்பட்டுமுள்ளன. அத்துடன், 300 இற்கும் மேற்பட்ட ஆலயங்களும், பெரும்பாலான பாடசாலைகள், கடைத்தொகுதிகள் என்பன அழிந்தும், சிதைந்தும் உள்ளன. இவை, தென்மராட்சிப் பிரதேச செயலகம் தெரிவிக்கும் தகவல்கள். தம்மளவில் தன்னிறைவோடு வாழ்ந்த மக்களின் வாழ்வாதார நிலைகள் சிதைக்கப்பட்ட பின்னர் - மீளக்குடியேறியுள்ள இம்மக்களது பொருளாதாரநிலை மிகவும் அடிமட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வயல் நிலங்கள் பலவும் மிதிவெடிகள் நிறைந்தனவாகவும், உயர்பாதுகாப்பு வலயத்துள் அகப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. பனை, தென்னை போன்ற பயன்தரு மரங்கள் எல்லாம் அழிந்துள்ளன. இருந்த அனைத்து உடமைகளும் இடப்பெயர்வோடு இல்லாமற்போயின. இத்தனைக்கு மத்தியிலும், தமது சொந்தப் பகுதியில் குடியமரவேண்டும் என்ற மனவைராக்கியத்தில் இங்கு குடியமர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படல் வேண்டும்.

தாம் இழந்த தமது பொருளாதார வளத்தை மீளவும் இம்மக்கள் பெறவேண்டும். அதற்குரிய சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க அரசோ, தொண்டு நிறுவனங்களோ, தாராளமனம் படைத்த கொடைவள்ளல்களோ முன்வரவேண்டும். பயிர்ச்செய்கை நிலங்கள் அனைத்தையும் மீளவும் ஒப்படைத்துப் படையினர் விலகவேண்டும். அழிந்துபோன தென்னை, பனை போன்ற பயன்தரு மரங்களை - குறுகியகாலத்தில் பயன்தரக்கூடிய புதிய இன மரங்களை மீள் நடுகைசெய்ய ஆலோசனைகளும், மானிய உதவிகளும் வழங்கப்படவேண்டும்.

## மந்தகதியில் புனரமைப்புப் பணிகள்

கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் குறைவின்றிக் கிடைக்க வழிவகை செய்யப்படல் வேண்டும். தென்மராட்சிப் பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை சகலவசதிகளும் கொண்டதாக விரைவில் புனரமைக்கவேண்டும். போதியளவு வைத்திய வசதிகள் குறைந்துள்ள இன்றைய நிலையில் - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் போன்றோரால் இலவச மருத்துவ முகாம்கள் - கிராமந் தோறும் நடத்தப்பட்டு - சிகிச்சைகளும், வைத்திய ஆலோசனைகளும், சுகாதாரப் பழக்கவழக்கங்கள் பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படல் வேண்டும்.

அழிந்துபோன கட்டடங்கள், வீடுகள் போன்றன விரைவில் புனரமைக்கப்படல் வேண்டும். வீதிகள் யாவும் செப்பனிடப்பட்டு, இலகுவாகச் சென்றுவர வழிவகை செய்யப்படல் வேண்டும். மந்தகதியில் நடைபெற்றுவரும் மின்விநியோகப் பணி விரைவுபடுத்தப்பட்டு, சகலருக்கும் கிடைக்க வழி செய்யப்படல் வேண்டும்.

யுத்தத்தின் கோரவடுக்களைச் சுமந்து, மூளியாகி கணவனை இழந்த கைம்பெண்போலப் பொட்டின்றி, மகிழ்வின்றி, பாழடைந்த நெற்றியுடன் காணப்படும் தென்மராட்சி அன்னைக்கு மறுவாழ்வளித்து, அவள் நெற்றியில் திலகமிட்டு மீளவும் மணவாழ்விற்கு இட்டுச்செல்லமுடியுமா? இப்பெரும் பணியைச் செய்யப்போகின்றவர் யார்? அரசா? சர்வதேச தொண்டர் நிறுவனங்களா? உள்ளூர் கொடைவள்ளல்களா? அல்லது அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்தா? இவை எல்லாம் நடைபெற்று மீளவும் தென்மராட்சித் தாயைக் மணக்கோலத்தில் நாம் காண்போமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**செ.சுதாகரன்**

# காஷ்மீரில் படைமுகாம் மீது தாக்குதல்;

# ஏழு இந்தியப் படையினர் உயிரிழப்பு!



காஷ்மீரில், இந்திய இராணுவ முகாம் ஒன்றின் மீது - முஸ்லிம் போராளிகள் நடத்திய தாக்குதலில், 7 இந்தியப் படையினர் பலியானதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் ஏழு இந்து யாத்திரிகர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து - இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் அமைதி முயற்சிகளை விரும்பாத சக்திகளே, தாக்குதலுக்குக் காரணமென, காஷ்மீர் முதல்வர் முப்தி முஹமட் சயீட் தெரிவித்தார்.

நேற்றுக் காலை, ஜம்மு பகுதியிலுள்ள தண்ட இராணுவ முகாமினுள் நுழைந்த இருவர் - கைக்குண்டுகளை வீசி, துப்பாக்கிச் சூட்டையும் நடத்தினர்.

மூன்று மணிநேரம் நீடித்த இத் தாக்குதலில், ஏழு படையினரும் இரண்டு கிளர்ச்சியாளர்களும் பலியானதாக, இந்திய இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பத்துக்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் காயமடைந்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள படைமுகாம்கள் மீது, ஒரு மாதத்தில் நடந்த இரண்டாவது தாக்குதல் இதுவாகும். கடந்த மாதம் 26 ஆம் திகதி இப்பகுதியிலுள்ள பிரிகேட் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில், 12 படையினர் பலியானதும், 20 பேர் காயமுற்றதும் தெரிந்ததே.

இதேவேளை - இந்துசமய யாத்திரிகர்கள், வைஷ்ணவதேவி ஆலயத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது, வீசப்பட்ட குண்டு, ஏழுபேரின் உயிரைக் குடித்தது. 40 பேர் காயமடைந்தனர்.

# பக்தாத்தில் ரோந்து அணிமீது மீண்டும் ஆர்.பி.ஜி தாக்குதல்!



வடக்கு பக்தாத்தில், நேற்றும் இராணுவ ரோந்து வாகன அணியொன்றின் மீது நடத்தப்பட்ட ஆர்.பி.ஜி தாக்குதலில், அமெரிக்கப் படை வீரர் ஒருவர் பலியானார். மற்றொருவர் காயமடைந்தார்.

தாக்குதல் நடைபெற்ற பகுதி, சதாமுக்கு ஆதரவான சுனி முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதியெனக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் - இப்பகுதியில் நடைபெற்ற தாக்குதலொன்றில் - அமெரிக்கப்படை வீரர் ஒருவரும், மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் பலியானது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய கெரில்லாப் பாணி தாக்குதல்களை, முற்றாக அழிக்க சில காலம் பிடிக்குமென, அமெரிக்க உள்துறைச் செயலாளர் கொலின் பவல் தெரிவித்துள்ளார். இதே கருத்தையே ஈராக்கிற்கான அமெரிக்க சிவில் நிர்வாக அதிகாரி போல் பிறேமர், அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஆகியோரும் தெரிவித்துவருகின்றனர்.

உலகவலம்

# அமெரிக்காவின் ஜனநாயக முயற்சியை பாதுகாப்புச்சபை விரைவில் ஆராயும்!

## ஈராக்கில் நிலைமை மோசமடைவதாகவும் கண்டனம்



தற்பொழுதும் ஈராக்கினுள்ளேயே இருப்பதாகக் கருதப்படும் சதாம் ஹூசைனின் புதல்வர்கள் உதய் (இடது புறம்) மற்றும் குசே ஆகியோர் வயல்வெளியினுள் இருந்து எடுத்த முன்னைய புகைப்படம் ஒன்று ஈராக் ஆவணக் காப்பகத்திலிருந்து தற்பொழுது மீட்கப்பட்டுள்ளது. அப்படத்தையே மேலே காண்கிறீர்கள்.



சேர்ஜியோ டி மெலோ

ஈராக்கில், முழு அளவிலான ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டுவரப்போவதாக, அமெரிக்கா அறிவித்துள்ள முடிவு தொடர்பாக - ஐ.நா பாதுகாப்புச்சபை விரைவில் கூடி ஆராயவுள்ளது.

ஈராக் மீதான அமெரிக்காவின் படையெடுப்பின் பின்னர் - ஈராக் விவகாரத்தில், ஐ.நா எடுக்கும் கரிசனையின் ஒருபடியாகவே இந்த நடவடிக்கை நோக்கப்படுகிறது. ஈராக்கில் - பாதுகாப்பு, பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக, ஐ.நா தனது அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

"நம்மை நாமே ஆளவேண்டும் - வெளியார் அல்ல" என்ற கோஷம், நாளுக்குநாள் ஈராக்கில் பெரும் ஆதரவுடன் அதிகரித்துவரும் நிலையில், ஐ.நாவின் இப்புதிய நடவடிக்கைகள் குறித்து, ஈராக்கிற்கான ஐ.நா பிரதிநிதி சேர்ஜியே டி மெலோ கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரது கருத்துப்படி - ஈராக்கின் நகரப்பகுதி வாழ்க்கை, தற்போது மிகவும் மோசமான நிலைக்கு வந்துவிட்டது. எனினும், தாம் அமெரிக்க நிர்வாகத்தை குறைகூறவில்லை எனவும் டி மெலோ தெரிவித்துள்ளார்.

இதனிடையே - வளைகுடாவில், அமெரிக்காவின் பிரசன்னம், இப்பிராந்தியத்தின் உறுதித்தன்மையை குலைக்கின்றது என, எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் தொலைக்காட்சி உரையொன்றில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈராக்கியரால் தெரிவு செய்யப்படும் ஒரு அரசு அங்கு அமைவதே, இதற்கு மாற்றுவழி எனவும் அவர் குறிப்பிட்டார். ஈராக்கில், நிலைமைகள் மோசமடைந்து வருவதாக, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் ஈகோர் இவானோவ் தெரிவித்துள்ளார். பாதுகாப்புச்சபை, புதிய பிரேரணை ஒன்றின்மூலம் ஈராக்கில் ஏனைய நாடுகளின் தலையீட்டையும் உறுதி செய்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

# இடி அமீன் நாடு திரும்பினால் சட்டவிசாரணைக்கு உட்படுவார்

## உகண்டா அதிகாரி அறிவிப்பு



இடி அமீன்

(கம்பாலா)

தற்போது கடும் சுகவீனமுற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படும், முன்னாள் உகண்டா சர்வாதிகாரி இடி அமீன், நாட்டுக்குத் திரும்பிவந்தால், சட்டவிசாரணைக்கு உட்படுவார் என- உகண்டாவின் மனித உரிமைகளுக்கான அரச குழுவின் இயக்குநர் ரீட் புரோடி தெரிவித்துள்ளார்.

கடும் சுகவீனமுற்றுள்ள இடி அமீன், தனது இறுதிக் காலத்தை உகண்டாவில் கழிக்க விரும்புவதாகவும், அந்த மண்ணிலேயே புதைக்கப்படுவதை விடும்புவதாகவும் அவரது முன்னாள் அரசியல் கட்சி ஆதரவாளர்களும், அவரின் மனைவியும் கோரியுள்ள நிலையிலேயே - உகண்டா அதிகாரியின் இக்கூற்று, வெளியாகியுள்ளது.

கோமா நிலையில் இருக்கும் இடி அமீன், தற்போது உயிர்க்காப்பு இயந்திரங்களின் உதவியுடனேயே உயிர் வாழ்கிறார்.

1971 முதல் 1979 வரையான அவரின் ஆட்சி, ஆபிரிக்க வரலாற்றில் இரத்தம் தோய்ந்த பக்கங்கங்களை உருவாக்கியது. கொலைகள், வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பன அவரது சொந்தக் கண்காணிப்பில் நடைபெற்றன.

இவை யாவும், உகண்டாவை மட்டுமல்ல உலகையே அதிர வைத்தது.

இவர், பின்னர் - சவூதி அரேபியாவுக்குத் தப்பிச்சென்று அங்கு அஞ்ஞாதவாசம் புரிந்துவந்தார். அமீனின் தற்போதைய நிலையில், அவர் சிறையில் உயிர்துறப்பதை விட, சுதந்திரமாக உயிர்விடுவதே மனிதாபிமானம் என, சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன்.

உகண்டாவைச் சேர்ந்த எவரும் நாட்டுக்குத் திரும்பிவரலாம். ஆனால், இடி அமீன் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என, உகண்டாவின் ஜனாதிபதி ஜோவ்ரி முசவேணியும் தெரிவித்துள்ளார்.

78 வயதான இடி அமீன், தற்போது சவூதி அரேபியாவில் உள்ள ஜெடா நகர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இடி அமீனின் கட்சியான உகண்டா மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள், அமீனை மீளவும் நாட்டுக்குள் கொண்டுவருவது அரசின் கடமையாகும் எனக் கூறியுள்ளனர். அமீனின் கல்லறை மீது நடனமாட, அரசின் சில உறுப்பினர்கள் காத்துள்ளனர் என்பது எமக்குத் தெரியும் என, எதிர்க்கட்சியான மக்கள் காங்கிரஸ் - அரசு மீது கண்டனம் தெரிவித்துள்ளது.

### ஹீத்ரோ தொடர்ந்து ஸ்தம்பிதம்

லண்டன் ஹத்ரோ விமான நிலையத்தின் அமைய ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால், அங்கிருந்தான விமானசேவைகள் தொடர்ந்து ஸ்தம்பித்துள்ளன. இதனால், பெருமளவு பிரிட்டிஷ் பயணிகள் - கடந்த நான்கு தினங்களாக விமான நிலையத்தில் பயணத்துக்காகக் காத்து நிற்கின்றனர். பயணிகளில் பலர் ஆத்திரமடைந்த நிலையிலும் காணப்படுகின்றனர். தமது விடுமுறைக் காலம், வீணாக விமான நிலையத்தில் கழிவதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

# ஸ்பெயின் ஹோட்டலில் குண்டுகள் வெடித்தன!

## ஒன்பது வெளிநாட்டவர் காயம்

ஸ்பெயினில் ஹோட்டல் ஒன்றில், நேற்று இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புகளில், ஒன்பது உல்லாசப் பிரயாணிகள் காயமடைந்தனர்.

பிரிட்டிஷ், ரஷ்ய, சுவிஸ் நாட்டவர்களே காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் நான்கு பொலிஸாரும் அடங்குவர்.

ஸ்பெயினில் - ஈ.ரி.ஏ. கிளர்ச்சியாளர்கள், குண்டுவைக்கப்பட்டிருப்பதாக ஹோட்டல் நிர்வாகத்துக்கு அறிவித்து, சில நிமிடங்களில் குண்டுகள் வெடித்தன.

இந்த எச்சரிக்கையையடுத்து அநேகமானோர் ஹோட்டேலை விட்டு வெளியேற்றப்பட்டதால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.



# லைபீரிய தலைநகரில் கடும் மோதல் மூண்டது

## இடையில் சிக்கி மக்கள் அவதி



லைபீரிய தலைநகர் அருகே, கடந்த நான்கு தினங்களாக கடும் மோதல் நடைபெற்றுவருகிறது. ஷெல் தாக்குதலும், கடும் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றுவருகிறது.

நகரின் துறைமுகப் பகுதியில், லைபீரியப் போராளிகளுக்கும், ஜனாதிபதி ரெயலருக்கு விசுவாசமான படைகளுக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்று வருகிறது. அண்மைய மோதல்களில் சிக்கி, சுமார் 100 பொது மக்கள் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கமுடியாது வைத்தியர்கள் திண்டாடுகின்றனர்.

இதேவேளை, போரை நிறுத்த அமெரிக்கா தலையிடாமை குறித்து, அநேகமான லைபீரிய மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். நீர், உணவு, உடையின்றி - போரின் மத்தியில் மக்கள் சிக்கியுள்ளதாக, ஐ.நா. அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். போர் தொடர்ந்தால், பெரும் மனித அழிவு ஏற்படுமெனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

துறைமுகத்தை, போராளிக்குழு கைப்பற்றியுள்ளதால் - உணவு, எரிபொருள் விநியோகமின்றி, தலைநகரில் மக்கள் அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நமது ஈழநாடு
Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இராணுவ உடையை அணிந்த சிறுவனை தாக்கிய படையினர்

## வந்தாறுமூலையில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வந்தாறுமூலையில் கடையில் விற்பனையான இராணுவ உடையை வாங்கி அணிந்து சென்ற, 11 வயது சிறுவன் ஒருவன் மாவடி வேம்பு முகாம் படையினரால் தடிகளாலும், கைகளாலும் தாக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம்பெற்றது.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது-

கடந்த சித்திரை வருடப் பிறப்பிற்காக தனது தந்தையினால் கடையில் வாங்கிக் கொடுக்கப்பட்ட மேற்படி உடையை அணிந்த சிறுவன், தனது பெரிய தாயாரின் வீட்டிற்கு பிரதான வீதியைக் கடந்து சென்றவேளை, சிறுவனைக் கண்ட படையினர் தாறுமாறாகத் தாக்கினர். பின்னர் தனியாக அழைத்துச் சென்று, மேற்படி உடை அணியக்கூடாது எனவும் மாறாக, இத்தகைய உடையை அணிந்தால் சுட்டுக் கொலை செய்துவிடுவோம் எனவும் எச்சரித்து விடுவித்தனர்.

இதேவேளை, நேற்று மேற்படி பகுதியில் தமிழ் இளைஞர்கள் மீதும் படையினர் கடுமையாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். மேற்படி சம்பவங்கள் தொடர்பாக இன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு பாதிக்கப்பட்ட சிறுவன் மற்றும் பொதுமக்கள் முறைப்பாடு செய்யப்போவதாகத் தெரியவருகிறது.

### லெப்.செல்லக்கிளி நினைவாக நடுகல்

லெப்.செல்லக்கிளி அம்மானின் 20 ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு - இன்று மாலை 6 மணிக்கு திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியில் நடுகல் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

இதையடுத்து நல்லூர் சட்டநாதர் கோயிலடியில் லெப்.செல்லக்கிளி அம்மான் நினைவாக கூட்டம் இடம்பெறும் என நல்லூர் கோட்ட அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

### வெஸ்பேர்க்...

கிரமசிங்க முன்வைத்த தீர்வுத்திட்டம் பற்றிப் பேசினீர்களா என, அவரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது,

அதனை ஏற்கவோ நிராகரிக்கவோ செய்யாது, பொதுவான விடயங்கள் பற்றியே உரையாடினோம் என அவர் தெரிவித்தார். இக்கலந்துரையாடல் ஒன்றரை மணிநேரம் நடைபெற்றதாக தெரியவருகிறது.

இதேவேளை - வெஸ்பேர்க் நேற்றைய விஜயத்தின் போது- தற்பொழுது வெளியாகியுள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளுக்கு மேலதிகமாக, மற்றுமொரு திட்டத்தை எடுத்துவந்து, விடுதலைப் புலிகளிடம் கொடுத்ததாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

## பொலிஸ் நிலையம் முன் தாக்குதல் கண்காணிப்புக்குழு வாகனம் சேதம்

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தை சமரசம் செய்வதற்காக சென்ற, யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் வாகனத்தின் மீது, கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டது. இதனால் வாகனத்தின் முன்பக்க கண்ணாடி சேதமடைந்ததாக, கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதிநிதி தெரிவித்தார்.

கும்புறுமூலை படைமுகாமிலிருந்து சென்ற இராணுவத்தினர் பொதுமக்களைத் தாக்கியதை ஆட்சேபித்தும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுமே இந்த ஆர்ப்பாட்டம். இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது.

படையினரின் தாக்குதலின்போது ஐந்து பொதுமக்கள் காயமடைந்ததாகவும், அதில் இருவர் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வீடு திரும்பியதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## பாடசாலைகள் மீள் புனரமைப்பில்...

லைகள் ஏற்கனவே உரிய அதிபர்களிடம் பல மாதங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

ஆனால், மீண்டும் இந்த நிகழ்வோடு எந்தவகையிலும் தொடர்புபட்டிராத புனர்வாழ்வு அமைச்சரினால் நேற்று மீண்டும் வைபவரீதியாகக் கையளிக்கப்படவிருந்தது.

யாழ்.குடாநாட்டில் இன்று பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பு முகாம்களாகவும், இராணுவ அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலுமே இருக்கின்றன. இப்பாடசாலைகளை மீள ஒப்படைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்காத அரசாங்கத்தின், எந்த அமைச்சர்களாக இருந்தாலும் இவ்வாறான ஒரு வைபவத்தில்- கலந்துகொள்ள அருகதையற்றவர்கள்.

இதனாலேயே இந்த நிகழ்விற்கு வருகைதந்த அமைச்சரை கலந்துகொள்ள வேண்டாம் என, பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் திருப்பி அனுப்பிவிட்டு -

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த ஜி.ரி.இசற் நிறுவனத்தினரை சகல மரியாதைகளோடு எமது மாணவர்களும் மக்களும் அழைத்துச் சென்று அதில் கலந்துகொண்டனர்.


நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு சில மணிநேரங்களின் பின், இந்த நிகழ்வை வைத்து அரசியல் இலாபம்தேட முயற்சித்தவர்கள், அமைச்சரை மீண்டும் அழைத்துவந்தனர். அவரிடம் - பல்கலைக்கழக வாயிலில் வைத்து பாடசாலைகளை இரண்டாவது தடவையாக கையளிக்க முயற்சித்தவேளை - மாணவர்களும், மக்களும் மீண்டும் அமைச்சரை, உரிய மரியாதையோடு திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் திரும்பிச்சென்றார்.

அத்துடன் நிகழ்வினை பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து நடத்துவதற்கு மாணவர்கள் அனுமதி வழங்கவில்லை.

ஜி.ரி.இசற். நிறுவனத்தினர் - இந்த நிகழ்வை நடத்துவதில் எமக்கு எதுவித ஆட்சேபனை இல்லை. இதனால்தான் அவர்கள் இந்த நிகழ்வை நடத்த அனுமதித்தோம்.

ஆனால், அவர்கள் எமது மாணவர்களை ஏமாற்றிவிட்டு, மீண்டும் நிகழ்வை அமைச்சரை அழைத்து நடத்த முயற்சித்தமை எமக்கு மிகவும் ஆத்திரமூட்டும் செயலாகவே இருந்தது. அதனாலேயே நாம் இந்த நிகழ்வை, பல்கலைக்கழகத்தில் நடத்தவிடாமல் இடைநிறுத்தினோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க,லி,ரா)



## கண்ணியில் சிக்கிய காட்டு யானை

ஒட்டுசுட்டான் காட்டில் கண்ணிவெடியில் சிக்கிய காட்டு யானை காலில் காயமடைந்தது.

காயமடைந்த இந்த யானையை விடுதலைப் புலிகளின் வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் மீட்டு, சிகிச்சையளித்து வருகின்றனர்.

ஒட்டுசுட்டானில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இதுவரைக்கும் அகற்றப்படவில்லை. இதனால் வனவிலங்குகள், அடிக்கடி கண்ணிவெடியில் சிக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### இடைக்கால நிர்வாக...

டைக்கப்பட்ட விடயங்கள் குறித்தும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் முரண்பட்ட கருத்துக்கள் நிலவிவருகின்றன.

இதனைத் தெளிவுபடுத்தும் வகையில், நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு முறையில் இந்த விவாதத்தினை நடத்தும்படி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தார்.

### ஜனாதிபதி சந்திரிகா இன்று உரை

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார். இவரது உரை இன்றிரவு 9.30 மணிக்கு அரசாங்கத் தொலைக் காட்சியிலும் வானொலியிலும் ஒளி, ஒலிபரப்பப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (01)

## பல்கலையில்...

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஐரோப்பிய யூனியனின் அழைப்பினை ஏற்றே நான் இந்த நிகழ்வுக்கு வந்தேன். பல்கலைக்கழக மாணவர்கள் குழப்பம் விளைவித்ததையடுத்து நாம் திரும்பிவிட்டோம்.

யாழ்.குடாநாட்டில் பல அழிவுகள் இடம்பெற்றுள்ளன. வெளிநாட்டு உதவிகள் மூலமே இதனை மீளக் கட்டியெழுப்ப முடியும். எனக்கு நேர்ந்த இச்சம்பவம் மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

கொழும்பிலுள்ள இனவாத ஊடகங்கள் - இச்சம்பவத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்யலாம். ஓர் சிங்கள அமைச்சரை தமிழ் மக்கள் வரவேற்கவில்லை எனக் கூறலாம். இது குறித்து பெரியளவிலான எதிர்ப்புகள் கிளம்பக்கூடாது என்பதுதான் எனது விருப்பம். ஆனாலும், இனவாதக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் பல பிரச்சினைகளை உண்டாக்கக்கூடும் எனத் தெரிவித்தார்.

## ஜெயலத்திற்கு மாணவர்கள்...

களை, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கும் வைபவமே நேற்று யாழ் பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில்- கைலாசபதி அரங்கில் மேற்படி நிகழ்வினை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப் பட்டிருந்தன. இதற்காகப் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களும், ஏனைய அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர். அத்துடன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயரதிகாரிகளும், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் வூட்டர் வில்ரனும் வருகை தந்திருந்தார்.

நிகழ்வு ஆரம்பமாவதற்குச் சற்று முன்னர், பல்கலைக்கழக வாயிலில் விசேட பாண்ட் வாத்தியக் குழுவினரும் அணிவகுத்திருந்தனர். அத்துடன் - யாழ். அரசாங்க அதிபர் உட்பட உயர் அரச அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக வந்திருந்தனர்.

அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தன, பல்கலைக்கழக வாயிலை வந்தடைந்ததும், பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டு வந்து அமைச்சரை உள்ளே நுழையவிடாது தடுத்து நிறுத்தினர்.

"உயர் பாதுகாப்பு வலயத்தில் பல பாடசாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. மேலும் பல பாடசாலைகளுக்கு, இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே மாணவர்கள் செல்லவேண்டியுள்ளது. எனவே, இவற்றையெல்லாம் கவனத்தில் எடுக்காமல் - ஏனைய பாடசாலைகளைப் புனரமைத்துவிட்டு, அவற்றைக் கையளிக்கும் வைபவத்தைக் கோலாகலமாகக் கொண்டாட முயற்சிக்கிறீர்கள். தயவு செய்து இந்த நிகழ்வில் பங்குபற்றாமல் விலகிச் செல்லுங்கள்" என்று ஒருமித்த குரலில் மாணவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் - மாணவர்களுடன் அமைச்சர் சிறிதுநேரம் வாக்குவாதப்பட்டார். இதனைத் தொடர்ந்து அமைச்சர் அவ்விடத்தைவிட்டு விலகிச் சென்றார்.

பின்னர் - திடீரென முடிவு மாற்றப்பட்டு, பல்கலைக்கழகத்துக்கு முன்பாக - நடுவீதியில் வைத்து, பாடசாலைகளை அதிபர்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு - மீண்டும், அமைச்சர் ஜெயலத ஜயவர்த்தன அவ்விடத்திற்கு வருகைதந்தார். நடுவீதியில் வைத்துப் பாடசாலைகளை அதிபர்களிடம் அவர் கையளிக்க முயற்சித்த வேளை, பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டுவந்து ஆர்ப்பாட்டம் செய்து, அமைச்சரை வாகனத்தில் ஏற்றி அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டதுடன், இதில் கலந்து கொள்ள வந்த அனைத்து அதிகாரிகளையும் வெளியேறும்படி மாணவர்கள் கோரினர்.

இந்தச் சம்பவத்தினால்- பல்கலைக்கழகத்தில் நேற்றுப் பரபரப்பான நிலை காணப்பட்டது. பின்னர் இந்த வைபவம் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அலுவலகத்தில் இடம்பெற்றது.

(க,லி,ரா)

### நாளை வெளியாகும்

'அமெரிக்கப் போர்க் கப்பலின் வருகை பின்னணியிலுள்ள மர்மம் என்ன?' கட்டுரை - தொடர்ந்து நாளை வெளியாகும்.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1531 திகதி: 22.07.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Z | 4 | 0 | 6 | 2 | 0 | 2 |

பிரசன்னா கணினிக்கல்வி நிலையம்
K.K.S றோட் சுன்னாகம்
எமது நிலையத்தில் குறைந்த செலவில் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள்.
- றோணியோ வேலைகள்.
- Printing (Lazer And Dotmatic, Colour)
- Scanning
- CD Writing(MP3, Audio,Vidio)
- Computer sales and Repairing

பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை
பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
குறிப்பிட்ட காலம் பத்திரிகைத்துறையில் செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி முடிவில் பத்திரிகைத் துறையில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
எதிர்வரும் 29.07.03 அன்று காலை 11.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் சமூகம் தரவும்.
நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(சி-1258)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது